விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 25 புதன்கிழமை (10.11.2004) தொலைபேசி - 2223378 ஒலி 327

ராம்கோ

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் சீமெந்து

முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# தலைவர் பிரபா – பாலசிங்கம் வன்னியில் மந்திராலோசனை!

## சமாதான முயற்சியின் நகர்வுகள் குறித்து ஆராய்வு



(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையில் வன்னியில் நேற்று முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.**

**இச் சந்திப்பில் அரசியல் வியூகங்கள் குறித்து இருவரும் நீண்ட நேரம் மந்திராலோசனை நடத்தியதாகத் தெரியவருகிறது.**







லண்டனிலிருந்து நேற்று அதிகாலை கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், துணைவியார் அடேல் பாலசிங்கமும் அங்கிருந்து அரச ெ ன்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டரில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹன்டர் வாகனம் மோதி இளம் தாய் பரிதாப மரணம்

### முரசுமோட்டையில் சம்பவம்

(பரந்தன்)

பரந்தன் முரசுமோட்டையில் அதிவேகமாக வந்த ஹன்டர் வாகனம் மோதி மூன்று பிள்ளைகளின் தாயார் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இச் சம்பவத்தில் முரசுமோட்டை மூன்றாம் கட்டையைச் சேர்ந்த த. சிவானந்தினி (வயது 29) என்பவரே உயிரிழந்தவராவார்.

தன்னுடைய பிள்ளையை கல்வி நிலையத்திற்குச் சென்று ஏற்றிவருவதற்காக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி இளைஞன் மரணம்

### ஊரெழுவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் ஊரெழுப் பகுதியில் நேற்றுக் காலை இத் துயரச் சம்பவம் இடம் பெற்றது. இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பிரபா (வயது19) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தனது இளைய சகோதரரின் பிறந்த தினத்துக்காக சட்டவிரோதமான முறையில் பெற்ற மின்சாரத்தை பயன்படுத்தி இரவு வீடியோ படம் பார்த்த பின்னர் மறு நாள் காலை 6 மணியளவில் மின் இணைப்பை துண்டித்தவேளை எதிர்பாராத விதமாக மின்தாக்கியதில் பிரஸ்தாப இளைஞன் அவ்விடத்திலேயே மரணமானார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (த-19)

## ஜோன் பீற்றர்ஸன் இன்று இலங்கை வருகிறார்!

### நாளை தலைவர் பிரபாவுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளை மீள ஒழுங்கமைக்கும் நோக்கில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் தலைமையிலான விசேட சமாதான தூதுக் குழுவினர் இன்று இலங்கை வருகின்றனர்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை மீள நிரற்படுத்தி ஒழுங்கமைக்கும் நோக்குடன் இரு தரப்புடனும பேச்சுக்களை நடத்துவதே இக்குழுவின் இலங்கை விஜயத்துக்கான நோக்கமாகும்.

இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தும் நோர்வேக் குழுவினர், தீபாவளிப் பண்டிகைத் தினமான நாளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்து பேச்சுநடத்துவதற்காக வன்னி செல்லவுள்ளனர்.

இரு தரப்புத் தலைவர்களினதும் முடிபுகளின் அடிப்படையில் தேங்கிக் கிடக்கும் சமாதான முயற்சியை துரிதப்படுத்தும் வகையில் பேச்சுக்கள் இடம்பெறுமென்று நோர்வேயின் வெளிவிவகார அமைச்சு முன்னர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இதேவேளை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்தமையும் பல முக்கிய அரசியற்தலைவர்களுடன் பேச்சுநடத்தியமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இன்று இலங்கை வரும் பீற்றர்ஸன் மற்றும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோருடன் எரிக் சோல்ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் ஆகியோரும் நாளை வன்னி செல்கின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

(இ-121)

## தமிழீழ சட்டக்கல்லூரி இன்று திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ சட்டக்கல்லூரி கட்டடத் திறப்பு விழா கிளிநொச்சியில் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கட்டடத்தை திறந்து வைப்பார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் நிகழ்வில் கலந்துகொள்வர். (த)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுதந்திர அறிவு, தளராத செயல்வீரம் பேராசிரியரின் வாழ்வு தரும் பாடங்கள்

**அமரரான முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராசாவின் 7 ஆவது பிறந்த நாள் இன்று; பெறுமதியான அவர் நினைவுகளை மீட்டுகின்றது இந்தக் கட்டுரை.**

பேராசிரியர்
என்.சண்முகலிங்கன்



"எங்கே அறிவு சுதந்திரத்துடன் பொலிகின்றதோ...
எங்கே தளரா முயற்சி பரிபூரணத்தை நோக்கி
கைகளைப் பரப்புகின்றதோ..."
"அங்கே என் தந்தையே, எனது தேசம் விழித்தெழுவதாக"
எனப் பாடுவார் தாகூர்.

சுதந்திர அறிவு, தளரா செயல் வீரம் இந்தப் பதங்களுக்கு அர்த்தம் சொல்லி, எங்கள் தேசத்தை வழிப்படுத்தி அமரரான அறிவுலகத் தந்தை பேராசிரியர் துரைராசா அவர்களின் பிறந்தநாள் இன்று.

அன்பு கனிந்த கனிவே சக்தியாக, அவரது ஆற்றலில் எங்கள் சமூகம் கண்ட மேன்மைகள் நிகரிலாதன. உலகப்புகழ் பெற்ற பொறியியலாளன். ஆனால் புகழ் தரும் போதை - செருக்கு ஏதுமில்லாத பெருந்தகையாளன். சுயநலம் கிஞ்சித்தும் இல்லாத பெருமனம். அதனால் அவரது உயர்ந்த அறிவு செயற்படும் அறிவாக சமூகப் பயன விளைத்தது.

யாழ்ப்பாணத்தின் மரபுவழி கிராமமான இமையாணில் 1934 ஆம் ஆணடு கார்த்திகை 10 ஆம் திகதி அழகையா - செல்லம்மா தம்பதிகளின மூத்த செல்லமாய் அவரின உதயம். இன்று எங்கள் சமூகத்தின் தலைமைக் குழந்தைகளில் ஒருவராக தேசத்து வரலாற்றின் முதன்மை ஆளுமையால் அவர் நினைவுகள் காக்கப்படும்.

யாழ்ப்பணப் பல்கலைக்கழக துணைவேந்தராக மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்து அவராற்றிய பணிகள்; சமூக மேம்பாட்டுக்கென அவர் வகுத்து வாழ்ந்து காட்டிய வழி முறைகள் யாவும் இன்றுவரை எங்களின் அசைவியக்கத்தின் அச்சாணியாக உள்ளன.

பேராசிரியர் துரைராசாவின் வாழ்வென்ற புத்தகத்தின் ஒவ்வொருவரியிலும் உன்னதம் உள்ளது. அவரோடு வாழ்ந்த அத்தனை கணங்களும் மகாநுபவமாய் உள்நின்று உயிர்ப்பூட்டுகின்றன.

அவரது வாழ்வும் வரலாறும் எதிர்கால சந்ததிக்கு முழுமையாய் ஊட்டப்படவேண்டும். இன்றைய இந்த இனிய பிறந்தநாள் பொழுதில், அதற்கான வழி முறைகளைப் பற்றி சிந்திப்போமே ! □

# செய்தித் துளிகள்

## பொதுமக்கள் கவனத்துக்கு!

(கொழும்பு)

சுற்றாடல் பாதிக்கப்படுவது சம்பந்தமான முறைப்பாடுகளை பொதுமக்கள் தெரிவிக்கவென மத்திய சுற்றாடல் அதிகார சபை 24 மணிநேர துரித தொலைபேசி அழைப்பை ஒழுங்கு செய்துள்ளது.

2872602 என்ற தொலை பேசி இலக்கத்தின் மூலம் பொது மக்கள அதிகாரசபையுடன் தொடர்பு கொணடு சுற்றாடல் பாதுகாப்புக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகள் பற்றியும் முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம். (க-60)

## விசனம்

(பொன்னாலை)

மூளாய் பிரதான வீதியில் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குச் செல்லும் சந்திப் பகுதியில் பாரிய கிடங்குகளும் குழிகளும் காணப்படுவதால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களையும் எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியைத் திருந்த முன்வர மாட்டார்களா என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-49)

## விழுங்கப்படும் வீதிகள்

(சங்கானை)

சங்கானை காரைநகர் பிரதான வீதியின் சங்கானைப் பிரதேசத் திற்கும் சண்டிலிப்பாய் பிரதேசத் திற்குமிடையிலான பகுதிகளில் உள்ள காணிகளில் வசிப்போர் வீதிகளைக் கூட வேலிகளிட்டு தம் காணிகளுள் உள்வாங்கி வருகின்றனர்.இதனால் அப்பாதையை இவ்வளவு காலமும் பாவித்து வந்த மக்கள் பாதையின் அளவு குறைந்து வருவதால் தற்போது சிரமப்படு கின்றனர்.

இது தொடர்பாக அரச அதிகாரிகளிடமும் பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளனர். ஆயினும் இதுவரை எந்த சாதகமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ப-20)

## நிதி உதவி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதியில் இயங்கும் ஸ்ரீபழனி சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சமூக அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

இதனைக் கொண்டு ஸ்ரீபழனி சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினர் 10 பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் ஆடு, கோழி வளர்ப்புக்கான கடனாக வழங்கியுள்ளனர். (ப-29)

## ஸ்கந்த ஷஷ்டி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் செந்தில் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்கந்த ஷஷ்டி விழா ஆரம்பமாகி 17 ஆம் திகதி வரை சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேற்படி விழாக் காலத்தில் டாக்டர் சு.நவரத்தினம் தினமும் ஸ்கந்த ஷஷ்டி விரிவுரை வழங்கவுள்ளதுடன், தினமும் பி.ப.4.15 மணிக்கு 'முருகன் பெருமை' எனும் விடயம் குறித்து பிரம்ம ஸ்ரீ கு.சிவராஜ சர்மாவும் சொற்பொழிவு வழங்கவுள்ளார். (ந)

## வெளியீட்டு விழா

(கோண்டாவில்)

ச.தெய்வேந்திரம் என்பவரால் எழுதி, இசையமைத்துப், பாடப்பட்ட 12 தெய்வீகப் பாடல்கள் அடங்கிய ஒலிம்பேழை வெளியீட்டு விழா நாளை தீபாவளி தினத்தன்று கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கானை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த செ.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இவ் விழாவில், மதிப்பீட்டுரையை யாழ். பல்க்லைக்கழக உதவிப்பதிவாளர் எஸ்.கே.தவராசாவும் பதிலுரையை பேழை வெளியீட்டாளர் தெய் வேந்திரமும் நிகழ்த்துவர்.

கோண்டாவிலுள்ள பல ஆலய தெய்வங்கள் மீது பாடப்பட்ட பாடல்களே இவ் ஒலிப்பேழையில் அடங்கியிருப்பது குறிப்படத்தக்கது. (ப-130)

## திருட்டு

(கல்வியங்காடு)

கோப்பாய் இராஜவீதியிலுள்ள வீடொன்றில் வயோதிபப் பெண்ணொருவர் தந்திரமாகப் பொருட்களைத் திருடியுள்ளார்.

கடந்த திங்களன்று மாலை நேரத்தில் குறித்த வீட்டிற்குச் சென்ற அப்பெண், இரவு தங்குவதற்கு இடம் கேட்டார். பரிதாபப்பட்டு இடம் கொடுத்த வீட்டு உரிமையாளர், அப்பெண்மணி இரு கைத் தொலைபேசிகளுடனும் வேறு சில பொருட்களுடனும் தலைமறைவாகிவிட்டதை அடுத்த நாள் காலை உணர்ந்தார்.

இது குறித்து அவர் பொலிஸில் முறையிட்டதைத் தொடர்ந்து பொலிஸாரின் துரிதநடவடிக்கையால் அப்பெண் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். திருடர்கள் எந்த வயதினராகவும் இருக்கலாம். ஆகவே பொது மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டுமென இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் அதிகாரி ஸ்ரீ செல்வம் தெரிவித்திருக்கிறார். (ப-74)

## கட்டாக்காலிகள் கட்டுப்படுத்தப்பட்டன

கரவெட்டி, துன்னாலை பகுதிகளில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நடவடிக்கைகளையடுத்து இப் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் தமிழீழபொருண்மிய 'மேம்பாட்டு நிறுவனம்' இப்பகுதிகளில் கால்நடைகளைக் கட்டிவளர்க்குமாறும் தவறும் பட்சத்தில் பயிரழிவு ஏற்படுமாயின் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்திருந்ததையடுத்து இவ்வாறு கால்நடைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. (க-52)

## அடிப்படை வசதியில்லை

(மீசாலை)

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் அடிப்படை வசதிகளற்ற நிலையில் பல சிரமங்களுக்கு மத்தியில் இயங்கிவருகின்றது.

இப்பாடசாலை தற்போது தனியாருக்குச் சொந்தமான காணியில் இயங்கிவருகின்றதாகவும், இக் காணியினை வாங்குவதற்குத் தென்மராட்சி கல்வி வலயம் தயக்கம் காட்டிவருவதாவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இப்பாடசாலையில் அபிவிருத்திப்பணிகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் இப்பாடசாலை மாணவர்கள பாதிக்கப்பட்டுள்ளனர். (ப-54, 10)

## படையினர் விலகினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பெரியமாவடி விவேகானந்த சனசமூக நிலையத்தில் இதுவரை காலமும் நிலைகொண்டிருந்த படையினர் அங்கிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து இச் சனசமூக நிலையத்தை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ப-29,127)

## திறப்புவிழா

வடமராட்சி கிழக்கில் உள்ள செம்பியன் பற்று அரசினர் கிராமிய வைத்தியசாலை இன்று புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மீளவும் திறந்து வைக்கப்படவுள்ளது.

கடந்த கால யுத்தத்தினால் முற்றாகச் சேதமடைந்த இவ் வைத்தியசாலை பல இலட்சம் ரூபா செலவில் தற்போது மீளப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு புனரமைக்கப்பட்ட வைத்தியசாலையின் திறப்புவிழாவில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொள்ளவுள்ளார் . (ப-47)

# எழுதுமட்டுவாள் பாடசாலையை மீளத் திறக்க துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் 55 ஆவது சேனைக்குட்பட்ட எழுதுமட்டுவாள் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன்



பாடசாலையை பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத் தளபதியின் ஆலோசனையின் பிரகாரம், 55 ஆவது சேனாதிபதியின் வழிகாட்டலில் மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரிய குழாம், பெற்றோர், மாணவர்கள் மற்றும் கிராமவாசிகள் அனைவரும ஒன்றிணைந்து கடந்த மார்ச் மாதம் ஆரம்பக்கட்டப் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கடந்த செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி காலை பாடசாலை கட்டிடத்திற்காக அடிக்கல் நாட்டப்பட்டது, 55 ஆவது சேனாதிபதியான பிரிகேடியர் ஆர்.சில்வா, ஆர்எஸ்பி, யூஎஸ்பி, அய்ஜீயும் இவ்வேலைப் பாட்டிற்கு ஆரம்பத்தில் இருந்து உதவி செய்த யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் வெளிநாட்டு ஆதிகாரியும், யாழ்.தொடர்பு அதிகாரியுடன், எழுதுமட்டுவாள் வடக்கு, அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும வேலைத்திட்டங்களைக் கடந்த 3 ஆம் திகதி பார்வையிட்டனர்.

திருத்த வேலைகளை விரைவில் முடித்து, பாடசாலையை அடுத்த ஆண்டு மீண்டும் ஆரம்பிப்பதற்காகவே மேற்படி குழுவினர் அதனைச் சென்று பார்வையிட்டனர். இதன் போது கலந்து கொண்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், இப்படியான வேலைப்பாட்டிற்கு, வழங்கிய உதவிக்கு இராணுவத்திற்கு நன்றி தெரிவித்தனர். (ந)

# ஜனாதிபதி வேட்பாளராக ரணிலின் பெயர் முன்மொழிவு

(கொழும்பு)

அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை முன்மொழிய வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே கட்சியின பிரதித்தலைவர் கருஜெயசூரிய மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பிஜயரத்ன ஆகியோர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 50 ஆவது சம்மேளனக் கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்படவேண்டும் என இதன் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், கட்சியின் அடுத்த சம்மேளனத்திற்கான யோசனைகளைத் தயாரிக்கும் அதிகாரங்களை அரசியல் குழுவிடம், கட்சியின் செயற்குழு சமர்ப்பித்தது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் மற்றும் அடுத்த தேர்தல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஐம்பதாவது சம்மேளனக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-121)

# இலங்கையில் முதலீடு செய்ய ஜப்பானியர்கள் அதீத விருப்பம்

(கொழும்பு)

எதிர்கால சந்ததியினரின் நலன்களைக் கருத்திற் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியமாகும் என இலங்கை வந்துள்ள ஜப்பானின் முன்னணி வர்த்தகர் ஒஜி அரிமாக்கி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு பெல்பொல வியஸ்தி மண்டபத்தில நடந்த வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில், நாடு பிளவுபட்டால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றலாம் என்பதை தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி போன்ற பிரச்சினைகள் நிலவுவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்ற போதிலும, ஜப்பானியர்கள் அதனை ஒரு பொருட்டாகக் கருதவில்லை, இலங்கையில் முதலீடு செய்ய அவர்கள் அதீத விருப்பம் கொண்டுள்ளனர்.


அத்துடன், எதிர்காலத்தில் எமது நாட்டு உல்லாசப்பயணிகளை கூடுதலாக இலங்கைக்கு அனுப்ப அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.(ந-121)

# 2.5 கோடி வழங்க முன்வந்தார் கேத்ரபால்; பிளெமிங் வெளியிட்டுள்ள அதிர்ச்சித் தகவல்

நியூசிலாந்துக் கிரிக்கெற் அணித் தலைவர் ஸ்டீபன் பிளெமிங், தனது கிரிக்கெற் வாழ்க்கையில் நடைபெற்ற பல சுவாரஸ்யமான நிகழ்வுகளைத் தொகுத்து **'Balance Of Power'** என்ற பெயரில் புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. பிரபல பத்திரிகையாளரான ரிச்சாட் புக் தொகுத்து எழுதியுள்ள இப்புத்தகத்தில், கிரிக்கெற் சூதாட்ட விவகாரம் தொடர்பான பல பரபரப்பான தகவல்களை பிளமிங் வெளியிட்டிருக்கிறார்.

சில வருடங்களுக்கு முன் சர்வதேச ரீதியாக மிகவும் சர்ச்சையைக் கிளப்பிய இவ்விகாரத்தில், தென் ஆரிக்காவின் முன்னாள் கிரிக்கெற் அணித்தலைவர் ஹன்சி குரோஞ்சே முதல் இந்திய கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் முகமட் அஸாருதின் வரை பலர் சிக்கினர். இக்காலகட்டத்தில் இந்திய சூதாட்ட ஓப்பந்தகாரர்கள் பலர் தன்னை அணுகியதாக அதிர்ச்சித்தகவல் வெளியிட்டிருக்கிறார் பிளமிங்.

1999ஆம் ஆண்டு இங்கிலாந்தில் உலகக் கிண்ணப் போட்டிகள் நடந்து கொண்டிருநதவேளை, எமது அணி வீரர்கள் அனைவரும் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தோம். அந்த ஹோட்டலில் இருக்கும் மதுபானசாலை மிகவும் பிபலமானது.



ஒருநாள் மாலையில் அங்கு ஒருவர் என்னை அணுகினார். இந்தியாவைச் சேர்ந்த ஆஷிம் கேத்ர பால் எனத் தன்னை அறிமுகப் படுத்திய அவர், தான் பிரபல சூதாட்ட ஒப்பந்தக்காரரான சஞ்சவ் சாவ்லாவின் நண்பர் எனவும் தெரிவித்தார்.

மேலும், விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகளை முன்கூட்டியே தீமனிப்பதற்கென்றே ஒரு அமைப்பு இருக்கிறது தெரியுமா? என வினாத்தொடுத்த அவர், "அங்குதான் கணிசமான பணம் புழங்குகிறது' என்றார். அது கிரிக்கெற்றில் மட்டுமல்ல அனைத்து விளையாட்டுகளிலும் தான். உதாரணத்துக்கு உதைபந்தாட்டப் போட்டிகளில் தொடாந்து வெற்றியைப்பெற்ற மஞ்ஷெஷ்டர் அணி, திடீரென ஒரு போட்டியில் மிக மோஷமாகத் தோற்றது. அதுபோல மிகப் பிரபலமான டென்னிஸ நட்சத்திரம் அன்டரூ அகாசி தீடீரென ஒரு போட்டியில் தோற்று, தொடரை விட்டே வெளியேறினார் இவையெல்லாம் எப்படி நடந்தன? எனவும் ஒரு கேள்வியைக் கேட்டார்.

அவர் சொன்னவற்றைக்கேட்ட அதிாச்சியிலிருந்து நான் மீள முன், உடனடியாக ஒருகோடி 70 இலட்சம் ரூபா பண்த்திற்காக ஒப்பந்தம எழுத தயாரானார். அது மட்டுமன்றி ஒருவருடத்திற்குள் மேலும் 80 லட்சம் தருவுதாகவும் கூறினார்.

அவரது துணிகரமான அணுகுமுறையில் திடுக்கிட்ட நான் உடனடியாக எனது மறுப்பைத் தெரிவிததேன். அத்துடன் உடனடியாக அவ்வடத்தைவிட்டு விலகி. எமது அணி முகாமையாளர் ஜோன் கிரஹாமிடம் சகல விடயத்தையும் தெரிவித்தேன். அத்துடன் 'ஸ்கொட லன்ட் யார்ட்' துப்பறியும் நிபுணர்களுக்கும் புகார் செய்தேன்.

இவ்வாறு பல பரபரப்பான தகவல்கள் இப்புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது.

இதேவேளை, தன்மீது கிரிக்கெற் சூதாட்டப் புகார் சுமத்திய பிளெமிங்கிற்கு எதிராக வழக்குத் தொடரப்போதாக ஆஷிம் கேத்ரபால் அறிவித்திருக்கிறார்.

பிளெமிங்கின் குற்றச்சாட்டுகளை முற்றாக மறுத்த கேத்ர பால், 1999இல் பிளெமிங்கை சந்தித்தது உண்மை என்றும். ஆனால அது உலகக்கிண்ணப போட்டியின்போதல்ல என்றும, பஞ்சாப் கிரிக்கெற் சங்கத்தின் சார்பில் கண்காட்சிப போட்டி ஒன்றை நடத்துவது தொடர்பாகவே அவரைச் சந்தித்ததாகவும் கூறியுள்ளார். அத்துடன் அது தொடர்பாக மேற கிந்திய வீரர் பிறையன் லாராவையும் சந்தித்ததாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் கிரிக்கெற் ஊழல தொடர்பாக தானும் ஒரு புத்தகத்தை வெளியிடவிருப்பதாகவும் கேத்ர பால் தெரிவித்திருக்கிறார். (து-7)

## ஏ.டி.பி.டென்னிஸ் சபன் தொடர் சம்பியன்

பரிஸ் மாஸ்டர்ஸ் ஏ.டி.பி டென்னிஸ் பட்டத்தை 3ஆவது முறையாக கைப்பற்றியுள்ளார் ரஷ்யாவைச்சேர்ந்த மாரட்சபன். 24வயதாகும் சபன், இதற்கு முன்பு 2000, 2002ஆண்டுகளில் நடைபெற்ற இப் போட்டியில் பட்டம் வென்றுள்ளார். இந்தத் தொடரில் அவர் வெல்லும் மூன்றாவது பட்டம் இது. இத்துடன் அவரது டென்னிஸ் வரலாற்றில் 14 சம்பியன்பட்டங்களை வென்றுள்ளார் சபன்.

பரிஸில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் அவர் 6:3,7:6,6:3 என்ற கணக்கில் செக்குடியரசின் ராடெக் ஸ்டெபானக்கை தோற்கடித்தார். இதற்கு முன், ஜேர்மனி வீரர் வோரிஸ் பெக்கர் 1986,1989மற்றும் 1992இல் பாரிஸ் பட்டத்தை மூன்று முறை வென்றிருக்கிறார்.

கடந்த 8 ஆண்டுகளில் ஸ்டெபானக் விளையாடிய முதலாவது இறுதப் போட்டி இதுவாகும்.

சபனபின் வெகு வேகமாக விளையாடினார். இருந்த போதும் எனது திறமைகள் முழுவதும் வீணாகிவிட்டது. என்று தோல்வியை ஒப்புக் கொண்டார் ஸ்டெபானக். (து-7)

# சுழல் பந்தை சமாளிக்கும் திறன் ஆஸி. அணிக்குப் போதாது

அவுஸ்திரேலிய கிரிக்கெற் வீரர்கள் சுழலபந்து வீச்சை சமாளிக்க இன்னமும் போதிய அளவில் கற்றுககொள்ளவில்லை என்று ஆஸி. கிரிக்கெற் பயிற்சியாளர் ஜோன் புக்கானென் கருத்துத் தெரிவித்துள்ளார்.


மும்பையில் இந்திய அணியுடன் நடைபெற்ற 4ஆவது கடைசி டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில், அவுஸ்திரேலிய அணி தோல்வியுற்றதே இதற்கு சரியான உதாரணம் என்று புக்கானென் விளக்கமளித்துள்ளாா.

துபாயில், கடந்த திங்கட்கிழமை வெளியான டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். முதல் 3 டெஸ்ட்களின் முடிவைப் பார்த்த போது ஆஸி. அணியினர் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயல்பட்டிருக்கிறார்கள் என்றே நினைத்தேன். ஆனால் கடைசி டெஸ்ட் அந்த எண்ணம் தவறு என்று நிரூபித்தது.

உலக அளவில் ஆஸி. அணி துடுப்பாட்டத்தில் முதற்தரமானது என்பது உண்மையாக இருந்தால், 107 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றிருக்க வேண்டுமே?

மும்பை வாங்கடே மைதானத்தின் ஆடுகளம் மோசம் என்பதை மறுப்பதற்கில்லை. என்றாலும் குறைந்த ஓட்ட இலக்கை விரட்டிப் பிடித்திருக்க வேண்டும். 13 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வி என்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். இது குறித்து சர்வதேச கிரிக்கெற சபை விசாரிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வேன். இருந்தாலும் ஆடுகளத்தின் தன்மையை மட்டுமே தோல்விக்கு காரணமாக கூறமுடியாது.

முதல இன்னிங்ஸிலேயே அதிக ஓட்டங்கள் எடுத்திருக்க வேணடும். இந்தியாவின் வி.வி.எஸ். லக்ஷ்மன் ஆஸி.அணிக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியது கவனிக்கத் தக்கது. தொடரை வென்றிருந்தாலும் 3-0 என்ற கணக்கில் முழுவதுமாக கைப்பற்ற முடியாததற்கு அவரின் சிறப்பான ஆட்டமும் ஒரு காரணம். லக்ஷ்மனின் ஓட்டக் குவிப்பு ஆஸி. அணிகது பாதகமாக அமைந்துவிட்டது. சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர்களின் விடயத்திலும் அதிக கவனமாக இருக்க வேண்டும் என்றும் புக்கானென் மேலும் தெரிவித்திருந்தார். (து-07)




கியூபெர்க் நகரி ல் நடந்த 'பெல் சேலஞ்ச்" டென்னிஸ் இறுதிப் போட்டி அண்மையில நடந்தது. இதில் ஸ்லோவாக்கியாவின் மார்டினா சுச்சா 7-5, 3-6, 6-2 என்ற செட்களில் கலிபோர்னியாவின் அபகெய்ல் ஸ்பயர்சை வீழ்த்தி சம்பயன் ஆனார். தான வென்ற கோப்பையை முத்தமிட்டு மகிழ்கிறார் சுச்சா.

# ஐ.நா. யுனெஸ்கோ அமைப்புக்கு சூமேக்கர் 7 கோடி நிதியுதவி

மோட்டார் காரோட்டப் பந்தயத்தின் முன்னணி வீரரான சூமேக்கர், யுனெஸ்கோ அமைப்புக்கு 7 கோடி ரூபா நிதியுதவி வழங்கியுள்ளார்.

ஜேர்மனியைச் சேர்ந்த சூமேக்கர், முதல்தர காரோட்டப் போட்டிகளில் 7 முறை சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தவர்.

மோட்டார் பந்தயங்களின் மூலம் பலகோடி வருமானம் பெற்றாலும் நல்ல பணிகளுக்காக அவற்றைச் செலவு செய்யத் தயங்காதவர் சூமேக்கர். ஏழைக் குழந்தைகளின் கல்வி, மருத்துவம், போனற பணிகளுக்காகவே ஐக்கியநாடுகள் சபையின் யுனெஸ்கோ அமைப்புக்கு இவா இந்த 7 கோடி ரூபா நிதியை வழங்கியிருக்கிறார். இத் தகவலை அவரது முகாமையாளரான வில்லி வெபர் தெரிவித்தார்.

யுனெஸ்கோ அமைப்புக்கு சூமேக்கர் கடந்த வருடமும் 5 கோடி ரூபா நிதியதவியை வழங்கியிருந்



தமை குறிப்பிடத்தக்கது.(து-7)

## விளையாட்டுச் செய்திகள்

# பவள விழா கிரிக்கெற் போட்டி இந்தியாவை வீழ்த்த அக்தார் உறுதி

இந்திய கிரிகெற் சபையின் 75ஆவது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் வகையில் நடத்தப்படும் ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் இந்தியாவை வீழ்த்துவதே தனது இலட்சியம் என்று கூறியுள்ளார் ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ் சொகைப அக்தார்.

இந்திய கிரிக்கெற் சபையின் 75ஆவது ஆண்டு விழா எதிர்வரும 13ஆம் திகதி கொல்கத்தாவில் கோலாகலமாக கொணடாடப்படவுள்ளதையொட்டி, இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதும் ஒருநாள கிரிக்கெற் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி இன்னும் சில நாட்களில் இந்தியா வர இருக்கிறது. முன்னதாக விளம்பரப் படத்தில நடிப்பதற்காக வேகப்பந்து வீச்சாளா சொகைப் அக்தார் இந்தியா வந்துவிட்டார். தோள் பட்டை வலி காரணமாக அக்தர் இலங்கை அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் ஆட வில்லை. தற்போது முழு குணம் அடைந்துவிட்டதை அடுத்து அக்தாருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மும்பையில் அக்தர் நிருபர்களிடம் பேசுகையில் இந்திய கிரிக்கெற் சபையின் 75ஆவது ஆண்டு விழா போட்டியில வெற்றிபெற துடிப்புடன காத்திருக்கிறேன். இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்திய அணி எங்கள் நாட்டில் ஒருநாள் மறறும் டெஸ்தொடரை கைப்பற்றியது. அது போல் இந்தியாவில் நடக்கும் போட்டியில் நாங்கள வெற்றி பெற காத்திருக்கிறோம் என்றார்.

இந்தியாவுடன் மோதல் முடிந்த பினனர் பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியாவில் நடக்கும் முத்தரப்பு போட்டியில் கலந்துகொள்ள விருக்கிறது. மேற்கு இந்தியதீவு, அவுஸ்திரேலியா ஆகிய மற்ற அணிகளும் இந்தப் போட்டியில ஆட உள்ளன. இந்தப்பந்தயத்தில் அதிக சாதனைகள் நிகழ்த்தவேண்டும். என்று அக்தார் காத்திருக்கிறார். இதற்கு ஒரு முன்னோட்டமாக இந்தியாவுடன் ஆட்டம் நடக்க இருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

இந்திய அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்தபோது பாகிஸ்தான அணித்தலைவர் மற்றும் அக்தாருக்கு இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஒருகட்டத்தில் இந்த வேறுபாடு முற்றி நேருக்கு நேர் இருவரும் வாக்குவாதம் செய்து கொண்டனர். இதன்பின்னர் இந்தியாவுடனான போட்டியில் அக்தர் தனது முழுப் பங்களிப்பை வழங்கவில்லை. என்று இன்சமாம் குற்றம் சாடினர் இந்த குற்றச்சாட்டை அடுத்து அக்தார் உள்ளிட்ட சில வீரர்கள் மீது பாகிஸ்தான் கிரிக்கெற் விசாரணை நடத்தியது. அடிக்கடி சர்ச்சைகளில் சிக்கிக்கொள்ளும் அக்தார் இந்த பரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்டார். தற்போது பாகிஸ்தான் அணியில் நல்ல பெயர் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் அவர் இருக்கிறார். இன்சமாமுடன் தற்போது எந்தவித கருத்து வேறுபாடும் அவருக்கு இல்லையென்பதால், நடக்கவிருக்கும் போட்டியில் அக்தார் முழு பலத்தையும் நிரூபிக்க போராடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காயம் காரணமாக அவதிப்பட்ட சமியும் தற்போது அணிக்கு திரும்பியுள்ளார். எனவே இந்தியாவுக்கு உள்ளூரில் கூடுதல் சவால் ஏற்படும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

பாகிஸ்தான் அணிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவும் அனைத்து முன்னணி வீரர்களுக்கும் வாய்ப்பு கொடுத்துள்ளது. டெண்டுல்கரும் மீண்டும் அணிக்கு திரும்பி இருப்பது இந்திய ரசிகர்களை உற்சாகப்படுத்தி உள்ளது. இந்த ஆட்டத்தில் டெண்டுல்கா அக்தாருக்கு இடையில் நேரடி சவால் ஏற்பட வாய்ப்பு உளளது. காயத்தால் அவஸ்திரேலியாவுடன் கடைசி 2 டெஸ்ட் போட்டியில் ஆடாத கங்குலி இர்பான் ஆகியோரும் அணிக்கு திரும்பிஉள்ளனர். மொத்தத்தில் கண்காட்சி போட்டி என்றாலும் இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெற் ஆட்டம் ரசிகர்களிடையே இப்போத எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. (து-7)

# இன்று ஒரு தகவல்

## விநோத ஆராய்ச்சி

அமெரிக்காவில் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் **Larry seiden** என்று ஒரு ஆராய்ச்சியாளர் இருந்தார். எதைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம் என்று இருந்தார். கடைசியில் ஒரு முடிவு செய்தார் தற்கொலையைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம் என்று ஆம் ! தற்கொலை மரணங்களைப் பற்றி ஆய்வு செய்யலாம் என்று இவருக்கு ஆசை வந்து விட்டது.

சரி! அதற்கு என்ன செய்தார் தெரியுமா? அமெரிக்காவில் இரண்டு பாலங்களைத் தேர்ந்தெடுத்தார். சான்பிரான்சிஸ்கோவில் இரண்டு பாலங்கள் உள்ளன. **Goldengate Bridge** என்பது ஒரு பாலம் **Bay Bridge** என்பது இன்னொரு பாலம். இந்த இரண்டு பாலங்களும் 1930ஆம் ஆண்டில் கட்டப பட்டவை. இந்த இரண்டு பாலங்களும் நீளத்தில் சமன். சாதாரணமாக அடிக்கடி இவற்றிலிருந்து பல பேர் விழுந்து தற்கொலை செய்து கொள்வது வழக்கம். ஆமாம் அவ்வளவு சகஜமாகி விட்டது தற்கொலை என்பது.

நமது ஆராய்ச்சியாளர் இந்தப் பாலங்களில் இருந்து விழுந்து தற்கொலை செய்துகொள்பவர்களைப் பற்றிக் கணக்கெடுத்தார். இரண்டு பாலமும் 1930ஆம் ஆண்டு கட்டப்பட்டவை. இரண்டின் நீளமும் ஒரே மாதிரி ஒரே அளவு நீளமுடையன. ஒவ்வொன்றும் 200 அடி அப்படி இருந்தும் இந்த இரண்டு பாலத்திலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கையை கணக்கெடுத்துப் பார்த்தால் அதில் அதிக வித்தியாசம் உண்டு.

**Bay Bridge** இல் எவ்வளவு தற்கொலைகள் நடத்திருக்கின்றதோ அதைப்போல ஐந்து மடங்குகள் அதிகமாக **Golden Gate Bridge** இல் நடந்திருக்கின்றது. இதற்கு என்ன காரணமாக இருக்கும்? அதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தார்கள். **Golden Gate Bridge** இற்குப் புகழ் அதிகம். அதனுடைய பேரும் நன்றாக உள்ளது. **Golden** என்று இருக்கிறதல்லவா? இந்தப் பாலம் கௌரவத்தில் கூடியது. அதனால் சாகப்போகிறவர்கள் இந்தப் பாலத்தைத் தேடி வந்திருப்பார்களோ?

மனோ தத்துவ ரீதியாக ஆராய்ச்சி செய்பவர்கள் இது அப்படித்தான் நடக்கின்றது என்று சொல்கின்றனர். சாகப்போகிறவர்கள் கூட கௌரவமாகச் சாகவேண்டுமென்று நினைக்கின்றனராம். அதனால்த் தான் கௌரவமான காலத்தைத்தேடி வந்து அதிலிருந்து குதித்து இறந்து போகின்றனர். இன்னும் சொல்லப்போனால் **Bay Bridge** ஐத் தாண்டி மறுபுறமாக இருப்பவர்கள் கூட தற்கொலை செய்வதென்று வரும் போது அந்தப் பாலத்தின் வழியாகவே அதைத்தாண்டி இந்தப் பக்கம் வந்து **Golden Gate Bridge** யில் குதித்து இறக்கின்றனர் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

சாகின்றவர்கள்கூட கௌரவமாக சாகவேண்டுமெனறு நினைக்கின்றனர். அதைவிட.....வாழ்பவர்கள் கௌரவமாக வாழவேண்டுமென்று நினைத்தால் நன்றாக இருக்குமல்லவா? நல்ல விதமாக ஒரு பாலத்தைக்கட்டி அதற்கு நல்லதொரு பெயரை வைத்தாலும் கூட அதிலும் ஒரு சிரமம் இருக்கிறது பார்த்தீர்களா?

இந்தக் கணக்குப்படி வந்தால் நமது ஊர் மக்கள் விரும்பித்தேடி வந்து கௌரவமாகத் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு எந்தப் பாலமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால்த் தான் இங்கெல்லாம் பாலத்தில் இருந்து குதித்து மனிதன் அதிகமாகத் தற்கொலை செய்து கொள்வதில்லை. அதற்குப் பதிலாக பஸ், ரயில் போன்றவையெல்லாம் பாலத்திலிருந்து குதித்து தற்கொலை செய்து கொள்கின்றன. அதுமட்டுமல்ல நமது ஆட்கள் தற்கொலைக்கு கொடுக்கும் விளக்கமே தனி விதமாக இருக்கிறது.

ஒரு ஆசாமி இப்படித்தான் ஒருநாள் என்னிடம் வந்தார். அவரிடம் நான் மேலே உள்ள விடயத்தைக் கூறினேன் அவரும் மிகவும் சுவாரஷ்யமாகக் கேட்டார். கடைசியாக நான் அவரிடம் "இப்படி பாலத்திலிருந்து குதித்து தற்கொலை செய்துகொள்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீகள? என்று கேட்டேன். அதற்கு அவர் "அதைப் பற்றியெல்லாம் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.... ஏனென்றால் நான் தற்கொலை செய்து 15 வருடங்களாகிவிட்டது" என்றார். "என்ன சொல்கிறீர்கள்? " என்று கேட்டேன். "எனக்குத் திருமணம் நடைபெற்றதைச் சொல்கிறேன்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு தரவேண்டும்

## அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

போரினால் அழிந்துள்ள எமது தேசத்தில் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

இவ்வாறு தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் வெளியிட்ட 'விழியின் பொன்மலர்' வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

விழி மருத்துவ இதழானது எமது மக்களின் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்க பெரிதும் உதவி வருகின்றது.

எமது மக்கள் மீது சிங்கள தேசியத்தினால் திணிக்கப்பட்ட போரினாலும் பொருளாதாரத் தடைகளினாலும் பல்வேறுபட்ட இன்னல்களை எமது மக்கள் அனுபவித்து வந்தார்கள்.

இவ்வேளையில் வருமுன் காக்கும் நடவடிக்கைகளை விழி மருத்துவ இதழ் முன்னெடுத்துச் சென்றது. அத்துடன் அதன் பணிகள் முடக்கி விடப்படாமல் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது.

எமது மக்களுடைய சுகாதார நடவடிக்கைகளை விரிவு படுத்தும் வகையில் மருத்துவ சங்கம் செயற்பட்டு வருகின்றது.

போரினால் அழியுண்டு பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட எமது தேசத்தில் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்,

பொதுச் சுடரினை தமிழ்ச் சங்க செயலாளர் பரமநாதபிள்ளை ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து "விழி" மருத்துவ இதழின் முதற்பிரதியினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் வெளியிட்டு வைக்க, முதற்பிரதியினை திருமதி சுயந்தன் பெற்றுக்கொண்டார்.



தொடர்ந்து மதிப்பீட்டுரையினை வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அருண், வைத்திய கலாநிதி திருமதி எழுமதி கரிகாலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நேற்று முன் தினம் வெளியிட்டு வைக்கப்பட்ட "விழி" மருத்துவ இதழின் 50ஆவது இதழில் "அதிக நீரை அருந்துவோம்" "பொருளாதாரத்துக்கு ஏற்ற வகையில் இருப்பதே நல்லது" 'தொழுநோய் ஒரு நோக்கு' 'புரிந்துணர்வு' சிறுகதை,வீதி விபத்துக்கள்,சுகாதார தொண்டர்களின் அவல நிலை போன்ற சிறப்பு அம்சங்கள் இடம் பெற்றன. (க-121)

# இராசி பலன்

**10.11.2004 (ஐப்பசி 25, புதன்கிழமை)**

**திரயோதசி முன்னிரவு11.21 மணிவரை**

**அத்தம் முன்னிரவு 10.31 மணிவரை**

**இராகுகாலம் 12.06-1.36 மணிவரை**

**சுபநேரம் 04.36- 06.06 மணிவரை**

**பிரதோச விரதம்**

**கௌரி விரதம் 19ஆம் நாள்**

**மேடம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், புதிய பொருள் சேர்க்கை, சத்துரு ஜெயம்.

**இடபம்** செத்துக்களால் கவலை, காரிய இடையூறு, பணவிரயம், தாழ்ந்த சுபாவம்.

**மிதுனம்** புதியதிருப்பம், பயந்த சுபாவம், முயற்சி தாமதம், தாய்வழி உறவு,

**கடகம்** இனிய சம்பவம், கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, பொருள் சேர்க்கை,

**சிங்கம்** மதிப்புக் குறைவு, பொருள் விரயம், காரியதாமதம், அதிக வார்த்தை.

**கன்னி** நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி. ஆழ்ந்தசிந்தை, பொருள் சேர்க்கை.

**துலாம்** பிதா சிந்தை, உணர்ச்சி வசப் படுதல், காரிய அலைச்சல், பணவிரயம்.

**விருச்சிகம்** தெய்வசிந்தை, மனமகிழ்ச்சி, பெருமையடைதல், காரியசித்தி.

**தனுசு** கடின முயற்சி, நல்ல செய்தி, அதிகாரம், நண்பர்கள் உதவி.

**மகரம்** ஆன்றோர் மதிப்பு, அச்சமான நிலை, கட்டுப்பாடு, திடீர் பயணம்.

**கும்பம்** வீண் தொல்லை, போசன நன்மை, உடல்நலக்குறைவு, பிரயாணபயம்

**மீனம்** அபூர்வ சந்திப்பு, பணவருவாய், கௌரவமான நிலை, பிரயாண நன்மை.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

வளவன்

# கிளிநொச்சியிலுள்ள குளங்கள் நிரம்பி வான் பாய்கின்றன

(கிளிநொச்சி)

தற்போது பெய்து வருகின்ற கடும் மழை காரணமாக கிளிநொச்சிப் பிரதேசத்தில் 25 சதவீதமான வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன. இதனால் இப் பிரதேசத்தில் காலபோகச் செய்கைக்கு இடையூறு ஏற்பட்டிருப்பதாக அபபகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக குளங்களின் நீர்மட்டமும் சடுதியாக உயர்ந்துள்ளது. கிளிநொச்சிக் குளத்தில் நீர்மட்டம் உயர்ந்து இருப்பதனால் மேலதிக நீர் வெளியேற்றப்படுகிறது.

இவ் வெள்ளம் காரணமாக பொதுமக்களின் போக்குவரத்து நடவடிக்கைகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, 10.3 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட கனகாம்பிகைக் குளத்திலும் நீர் நிரம்பி வான் பாய்கின்றது. வான் பாயும் கட்டின் நீளம் 350 அடிகளாகும். மேலதிக நர் வயல் வெளிகள் ஊடாக கடலைச் சென்றடைகின்றது. ஆனையிறவு கடல் நீரேரிப் பகுதியில மழை காரணமாக நீர் நிரமபியுள்ளது. இதனால் ஏ-9 வீதி ஊடாக போக்குவரத்துக்கும் இது இடைஞ்சலாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-121)

# மன்னார் கடற்பரப்பில் 12 இந்திய மீனவர் கைது

(யாழ்ப்பாணம்)

மன்னார் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களை கடற்படையினர் நேறறு அதிகாலை கைது செய்துள்ளனர். அவர்கள் வந்த மூன்று இழுவைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தலை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளதுடன், அவர்களின் இழுவைப் படகுகள் காரைநகருக்குக் கொண்டு செல்லப்படுமென்று தலைமன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மன்னார் பேசாலை மீனவர்களின் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து மீனவர்களின் தொழில் வழமைக்குத் திரும்பியுள்ளது. (ந)

# யாழ். குடாநாட்டில் தொண்டர் அமைப்புகளால் உபகரணங்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

இத் தாலியைச் சேர்ந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாகிய மூவிமெண்டோ யாழ்ப்பாண மாவட்டத்தில் மீனவர்கள், மேசன்மார் மற்றும் கோழிகள் வளர்ப்போருக்கான உபகரணங்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் வழங்கியுள்ளது.

இந்த வகையில் 40 கட்டுமரங்கள், 10 படகுகள், 810 மேசன்மாருக்கான உபகரணங்கள் மற்றும் 413 குடும்பங்களுக்கான கோழி வளர்ப்புக்கான கூடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவிப்பொருட்கள் வடமராட்சி கிழக்கு, சங்கானை, உடுவில், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருப்பவர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டதாக யாழ்ப்பாணத்தில் உள்ள மேற்படி நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனமாகிய பட்டினிக்கு எதிரான இயக்கம் ஊர்காவற்றுறையிலுள்ள 3 கிராம சேவையாளர் பிரிவுகளில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 101 விவசாயிகளுக்கு விவசாய முயற்சிகளை மேற்கொள்ள விவசாய உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இதேவேளை, தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 3 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள விவசாயக் குளங்களை ஆழப்படுத்தும் திட்டத்தையும் அண்மையில் பூர்த்தி செய்துள்ளது என மேற்படி நிறுவனத்தின் திட்டப்பொறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ப-16)

# தீயோர் கையில் சிக்கியுள்ள புதுவை அரவிந்தர் ஆச்சிரமம்

மகரிஷி அரவிந்தர்-அகில உலகமுமே ஏற்றித்துதிக்கும் தவமுனி. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர். சிறைச்சாலையில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் அளித்த தண்டனையை அனுபவித்துககொண்டிருந்த நேரத்தில் ஞானம் பெற்றவர்.

விடுதலை அடைந்ததும் அரசியலை-ஏன் உலக லௌகீக வாழ்வையே துறந்து துறவியானவர்.

துவராடை அணிந்து உலக பந்தங்களை ஒழித்து, மக்களுக்குப் புதிய பாதை காட்டப் புதுவையிலே ஆச்சிரமம் கண்டவர். அவர் அமைத்த "அரவிந்த ஆச்சிரமம்" இன்று 450 ஏக்கர் நிலத்தில் பரந்து விரிந்து உலகமெங்கனும் நூற்றுக் கணக்கான கிளைகளுடன் செழித்து நிற்கின்றது.

மகரிஷி அரவிந்தராலும் அவரது பாரியாராலும் பேணி வளர்க்கப்பட்ட புதுவை அரவிந்தர் ஆச்சிரமம் இன்று மும்பை தாதாக்களின் ஆக்கிரமிப்பில் சிக்கி, சீரழிந்து பலதரப்பட்ட குற்றச்சாட்டுக் களுககுள்ளாகி இருப்பதைக் கண்டு கண்ணீர் வடிக்கிறார்கள் அரவிந்தர் மீதும் அன்னை மீதும் பக்தி கொண்ட மக்கள்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் பல சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அடைக்கலம் தந்தது பாண்டிச்சேரி என்று அழைக்கப்படும் புதுவை.

சொநத நாட்டில் வாழத் துரைததனத்தார் தடைவிதித்ததால். பாரதியார் புதுவையில் தங்கிப் புதுப் பாதை வகுத்தார். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனை தமிழ் உலகுககளித்த பெருமை புதுவைக்கு உண்டு. உலகம் போற்றும் தவமுனி அரவிந்தர் ஆச்சிரமம் பரந்துகிடக்கிறது புதுவையில்.

அரவிந்தரால் ஆரம்பிக்கப்பட்டு, ஆங்கிலப் பெண்ணான அவரது மனைவியாரால் பேணி வளர்க்கப்பட்ட புகழ்பூத்த அரவிந்த ஆச்சிரமத்தில் இன்று கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பெண்களைப பொதுச் சொத்தாக்கும் முயற்சி, கொத்தடிமைத்தனம் முதலிய சகல விதமான குற்றங்களும் வளர்ந்து வருவதாக மக்கள் குமுறுகிறார்கள்.

இதுபற்றி இன்று எழுதாத பத்திரிகைகள் இல்லையென்றே கூறலாம். இதற்கெல்லாம் காரணமானவர்கள் தாதாக்கள். இவர்களாலேயே பிரச்சினை ஆரம்பமானது.

இந்தக் கூட்டத்தைச்சேர்ந்தவர்கள்தான் ஜெயசிறியும் அவரது ஐந்து சகோதரிகளும். சமீபத்தில் ஜெயசிறி புதுவை காவல் நிலையத்தில் தானும் தன் சகோதரிகளும் வசிக்கும் அறைக்குள் ஆபாசமான படங்களை வரைகிறார்கள் என்றும், தங்களை நிம்மதியாக வாழவிடுகிறார்கள் இல்லையென்றும் புகார் செய்தார். ஆச்சிரம வாசிகளா இப்படிச் செய்கிறார்கள் என ஆராயப்புகுந்த பொலிஸாருக்கு மேலும் பல அதிர்ச்சிகள் காத்திருந்தன.

நந்திவர்மன் என்பவர் புதுவையில் வசிக்கும் ஓர் ஆன்மீகவாதி. ஆச்சிரமத்தை இக் கொடிய கும்பலிடமிருந்து மீட்க நீண்ட நாட்களாகப் போராடிவருபவர்.

அரவிந்த ஆச்சிரமத்தின் விதிகள் மாற்றப்பட்டுவிட்டன. மும்பையைச் சேர்ந்த பெரிய தாதாக்கள் தஙகள் குற்றச்செயல்களை மறைப்பதற்கு அரவிந்த ஆச்சிரமத்தைப் பயனபடுத்தி வருகிறார்கள். அங்கு பாலியல் ரீதியான பல சம்பவங்கள் மற்றும் கொலைகள் நடந்து வருகின்றன. ஆச்சிரமத்தில் ஆபாசப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன. பெண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுகிறார்கள்.

அரவிந்த ஆச்சிரமத்துக்கு வருமெளிநாட்டவர்களுக்குப் பெண்கள் போகப் பொருட்களாக்கப்படுகிறார்கள். மாற்றப்பட்ட ஆச்சிரம விதிகளின்படி ஆச்சிரமத்தினுள் நடபபதை வெளியில் புகார்செய்ய முடியாது. எல்லாம் உள்ளுக்குள்ளேயே நடந்து முடிந்துவிடுகிறது. பிரேமானந்தா ஆச்சிரமத்தில் நடந்ததைபோன்ற சம்பவங்கள்தான் இங்கும் நடக்கின்றன என்று கூறி மனம் வருந்துகிறார் அவர்.

ஆச்சிரம நடவடிக்கை பற்றிப் பொதுமக்களும் அதிருப்தியும், கவலையும் தெரிவித்த வண்ணமே இருக்கிறார்கள்.

உளளூர் மக்களின் கருத்து இப்படியிருக்க, எதைப்பற்றியும் கவலைப்படாமல் எல்லாக் கதவுகளையும் இறுக மூடிக்கொண்டு ஒரு மர்ம தேசமாக இயங்கிக்கொண்டு இருக்கிறது அந்த ஆச்சிரமம்.

இந்த ஆச்சிரமத்திலே பல நூற்றுக்கணக்கான ஒரிசாவாசிகள் கொத்தடிமைகளாக கூலிவேலை செயகிறாாகள். இவர்களுக்கு உணவு உடை கொடுத்து மாதம் 75 ரூபா சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. எக்காரணம் கொண்டும் ஆச்சிரமத்துக்கு வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இவர்களிடம் கேட்டால் "பணம் இல்லாததால வக்கீல் இல்லை, வக்கீல் இல்லாததால் போராட முடியவில்லை" என்கிறார்கள்.

இப்பொழுது ஆச்சிரமத்திலே பல விடயங்கள் நடந்துகொண்டிருககின்றன. அரசியல்வாதிகள் உடபட எல்லோருமே ஒன்றுசேர்ந்து இதனைக்கேட்க வேண்டும். ஆச்சிரமததைப் பிழைஎன்று எவரும் சொல்லவில்லை. ஆச்சிரமம் ஆன்மீக சக்தியுள்ள நல்லதோர் அமைப்பு. அதனை அழிக்கும் நோக்கத்துடன் சில சமூக விரோதிகள் உள்ளே இருக்கிறார்கள். பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்துகொண்டிருப்பதாகப் பாதிக்கப்படுபவர்கள் சொல்கிறார்கள. தகுந்த நடவடிக்கைகளைப் புதுவை அரசாங்கம் எடுக்கவேண்டும் என அங்கலாய்க்கிறாாகள் உளளூர் வாசிகள்.

இவர்கள் அனைவரும் ஆச்சிரமததிலும், அரவிந்தரிலும் 'மதர்' என்று சொல்லப்படும் லீலாவதி மீதும் மிகுந்த மரியாதை வைத்துள்ளவர்கள். அவர்கள் சொல்வது எல்லாம் இப்பொழுதுள்ள பரிபாலனசபையினதும் அங்கு பதுங்கியிருக்கும் தாதாக்களின் நடவடிக்கைகளையும் பற்றித்தான்.

மதருடைய செயலாளராக 22 வருடங்களாகக் கடமையாற்றியவா தினசரி மதருடன உரையாடி அவ்வுரையாடல்களையெல்லாம் கஸட்டிலே பதிவுசெய்து, பிராஞ்சுமொழியிலே கூறப்பட்டவையெல்லாவற்றையும் ஆங்கிலத்திலே மொழிபெயர்ந்து ஆறாயிரம் பக்கங்களிலே 13 தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார்.

அந்தப் புத்தகத்தின் 13ஆவது தொகுதியில் கடைசி காலத்திலே மதருடைய கண்பார்வை குறைவு ஏற்பட்டபோது கூட இருந்தவர்கள் எல்லோரும் தன்னை எப்படியெப்படியெல்லாம் ஏமாற்றப்பார்த்தாகள என்று அவருடைய வாயாலேயே கூறப்பட்டது. அந்தப் புத்தகததிலே இடம்பெற்றிருக்கிறது. இது கஸட்டிலே பதிவாகிஇருக்கிறது.

தனககு ஏதாவது நேர்ந்துவிட்டால் ஆச்சிரமத்தை நல்ல முறையில் நடத்தவேண்டுமென்றும் கேட்டுககொண்டிருக்கிறார். ஆனால் இப்பொழுது அந்தக கஸட்டுக்கு என்ன நடந்ததென்றே தெரியவில்லை. அவருக்குப் பிறகு அந்த அறக்கட்டளை சீரழியத் தொடங்கியது. தற்போதைய அறக்கட்டளையில-தமிழர்கள் பெருமளவு வாழும் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆச்சிரமத்தின் அறக்கட்டளையில்-ஒரு தமிழர்கூட இல்லை என்பது வேதனைக்குரிய விடயம். இந்த ஆச்சிரமம் பற்றிய கதைகள் பரவத் தொடங்கிய நிலையில், புகார்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் மர்மமான முறையில் அரவிந்த ஆச்சிரமத்தின் தலைவராக இருந்த நௌஜகா என்பவா மரணமடைந்தார். தற்கொலை செய்து கொண்டார் என்றே பரவலாக ஊரிலே பேசப்படுகிறது.

இதனுடன் தொடர்புபட்ட இன்னொரு சோகக்கதை. இரண்டொரு வருடங்களில் அனைவரும் மறந்துவிட்டகதை. உளளூர்ப் பெண்ணான பார்வதி மார்வாடி வைரவியாபாரியின் மகனான நபிஷாவைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டாள்.

பின்னா நபிஷாவின் தம்பி கமல்ஷாவால் கற்பழித்துக்கொல்லப்பட்டாள். இந்த வழக்கில் முதல் குற்றவாளியாகக் குறிப்பிடப்பட்ட கமல்ஷா இன்றுவரை கைதுசெய்யப்படவில்லை. ஆச்சிரம எல்லைக்குள் எது நடந்தாலும் டிரஷ்டியிடம் தான் சொல்ல வேண்டும். பொலிஸுக்குச் செல்லக் கூடாது என ஆச்சிரம விதி இருக்கிறது. ஆசசிரமத்தில் ஏதாவது தீவிபத்து நடந்தாலும் தீயணைப்புப் படைக்குச் சொல்லக்கூடாது; டிரஸ்டிக்குத்தான் சொல்ல வேண்டும் என்ற நிலை. ஆச்சிரமத்தின் போர்வையைப் பயன்படுத்தி பொலிஸாரை ஏமாற்றி வருகிறார்கள்.

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட கமல்ஷா தங்கு தடையின்றிப் புதுவைக்குவந்து போகிறார். இது பொலிஸுக்கும் தெரியும்.

ஆனால் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. காரணம் ஆச்சிரமத்தின் பலம். இன்று அரவிந்த ஆச்சிரமம் ஒரு வியாபார மையமாகிவிட்டது. அரவிந்தர் பெயரைப் பயன்படுத்தி, அரவிந்தா பெயரில் பல டிரஸ்டிகளை ஏற்படுத்தி அரசாங்கத்தை ஏமாற்றி வருகிறார்கள்.

கரண்சில் மத்திய அமைச்சில் சுகாதார அமைச்சராக இருந்த போது வருமானவரி சலுகை பெற்று மருந்துவ ஆராய்ச்சிக்காக ஆஸ்பத்திரி ஒன்று அமைக்கும் அனுமதி பெற்றவர்கள் ஆச்சிரமத்தினர். மருத்துவ ஆராய்ச்சி எனறால் அது நவீன மருத்துவமனை அமைக்கப்பட வேண்டும். கரணசிங் காலத்தில் அனுமதி பெற்றபோதும் 2003 வரை அவர்கள் மருத்துவமனையே கட்டவில்லை.

இந்த நிலையில், பொது நல அமைப்பு ஒன்று ஏழை மக்களுக்காக மருத்துவமனையொன்று கட்ட முனவந்தது. அந்த அமைப்பு அரவிந்த ஆச்சிரமத்தை அணுகி, ஆஸ்பததிரி கட்டுவதற்கு ஒரு துண்டு நிலம் தந்தால் நாங்கள் கட்டிக்கொள்கிறோம் என்று கேட்ட போது அவர்கள் மறுத்ததனால் புதுவையில் கட்டடம் கட்டப்பட்டிருக்கவேண்டிய மருத்துவமனை குஜராத்துக்குப் போய்விட்டது.

இததனைக்கும் அரவிந்த ஆச்சிரமம் 450 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரபபில் பரந்து விரிந்து இருக்கிறது. இந்தியாவிலேயே தர்மம் செய்யாத ஆச்சிரமங்கள் எதுவும் கிடையாது. ஆனால் தர்மமே செயயாதே தர்மசாதனமாக அரவிந்தர் ஆச்சிரமம் இருக்கிறது.

அவர்கள் செய்துள்ள மோசடிகள் பற்றி 24 வழக்குகள் நிலுவையில் இருக்கிறது. அரவிந்தருடைய அண்ணன் மகன் சொல்கிறார், அரவிந்தர் பிறந்த பிறகு தான் ஆச்சிரமம் வந்தது. எங்கள் குடும்பததிற்கு அல்லவா ஆச்சிரம உரிமை இருக்கிறது. வேறுயாருக்குமே உரிமை இல்லை. இது பொதுச சொதது அல்ல, தனியார் சொத்து என்று.

ஆச்சிரமத்தில் **NO SEX** என்றால் கலியாணம் செய்து கொண்டவர்களையும் பிள்ளை பெற்றவர்களையும் எப்படி ஆச்சிரமத்தில் வைததிருக்கிறார்கள் என்று தெரியவில்லை என்பது சிலரது சந்தேகம். புதுவை கடற்கரைச்சாலையும் சேர்த்து சுற்றுமதில் கட்டி பூட்டி வைத்திருக்கிறது ஆச்சிரம நிர்வாகம். வங்கக் கடற்கரை தனியார் சொத்தா? ஆச்சிரமத்திற்கு கதவு எதற்கு? யாராக இருந்தாலும், எங்கிருந்தாலும் அடைக்கலம் தேடிவரும் இடம்தான் ஆச்சிரமம். அதற்கு ஏன் பூட்டு என்கிறார்கள் உள்ளூர் மக்கள்.

92 வயதான சுதந்திரப் போராட்டத் தியாகி ராமானுஜம் என்பவர் ஆச்சிரமத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், ஆச்சிரமத்தைப் பற்றிப் பொதுமக்கள் கொண்டிருக்கும் அதிருப்தி சொல்ல முடியாதது. இங்கு பாலியல பலாதகாரம், விபச்சாரம், படுகொலை முதலியன நடந்து. கோட்டில் வழக்கும் நடைபெற்று வருகின்றது என்று கூறினார்.

ஆசசிரமத்தில் நடைபெறும் ஊழல்கல், நிர்வாகச் சீர்கேடு, பாலியல் பலாத்காரம் முதலியவற்றை அரவிந்தர் மீதும் அன்னை மீதும் பக்தி கொண்டவர்கள் எதிர்த்துப போராடி வருகிறார்கள். ஆச்சிரமத்தைப்பற்றி இன்னும் எத்தனையோ வெளிவராத தகவல்களும் விடை தெரியாத கேள்விகளும் உள்ளன.

ஆச்சிரமத்திற்கு வரும் நன்கொடைகளுக்கான டிராப்ட்டுகள் இப்பொழுதும் அன்னை பெயரிலேயே வந்துகொண்டிருக்கின்றன. இந்தியன் வங்கி முதலிய வங்கிகள் எல்லாம் எப்படி இறந்தவர் பெயரிலே வருகிற டிராப்ட்டுகளை ஏற்றுக்கொள்கின்றனவோ தெரியவில்லையென அங்கலாய்க்கிறார்கள பொதுமக்கள். அன்னை உயிரோடு இருப்பதாக பக்தர்கள் கூறலாம். ஆனால் சட்டப்படி அவர் இறந்தவர் தான்.

ஒரு மகானால் உன்னத நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ஆச்சிரமம் அதன் பழைய அருமை பெருமையை மீண்டும் பெறவேண்டும் என்பது தான் பொது மககளின் பொதுவான கோரிக்கையாக இருக்கிறது. □

**சிபி**

# இந்திய மீனவர்களின் தொடர் அத்துமீறலுக்கு இந்திய அரசின் தளர்வுப்போக்கே காரணம்

## கடற்றொழில் நீர்வள அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பினுள் இநதிய மீனவர்களின் அத்துமீறல் சம்பவங்கள் தொடர்கின்றமைக்கு தமிழக அரசின் தளர்வுப்போக்கே காரணம்என கடற்றொழில் நீர்வள அமைசசா் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்தார்.

மன்னார் மீனவர்களின் போராட்டம் தொடாபாக கருத்து வெளியிடும போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் இதுவிடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

மனனார் மீனவர்களின் போராட்டம் நியாயமானது. அதேவேளை இந்தப் போராடடம் இந்திய அதிகாரிகளுக்கு எதிராகவே நடத்தப் படவேண்டும்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய பிரவேசத்தின் காரணமாக இலங்கைக் கடற்பரப்பினுள் மீன்வளங்கள் அழிந்துபோகின்றன. இதனைத தடுப்பதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் யாவும் இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவை சீர்குலைக்காதவகையில் அமையும் எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை, இந்திய மீனவர்களின் இவ்வாறான நடவடிக்கைகள் நிறுத்தப்படும்வரை தமது போராட்டம் தொடருமென பேசாலை மீனவர்கள் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-8)

# காரைநகரில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளது

காரைநகர் பிரதேசத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

காரைநகர் வடகிழக்கு கிராம சேவகர் பகுதியிலும் காரைநகர் மேற்கு, காரைநகர் வடக்கு பகுதிகளிலுமே இவ்வாறு சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளது.

மழை காலங்களில் இவ்வாறான சட்டவிரோத மின்பாவனையால் மின்ஒழுக்கு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பகிரங்கமாக இசசட்டவிரோத மின்பாவனை இடம்பெறுகின்ற போதும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ப-246)

# வலி.தென்மேற்குப் பகுதி மக்கள் தொற்றுநோயினால் அவதி!

(சுதுமலை)

வலி. தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த 10 நாட்களில் காச்சலினால் பீடிக்கப்பட்ட நோயாளர்களின் தொகை மிக அதிகரித்துக் காணப்படுவதாக வைத்தியசாலைப் புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவருகின்றது.

குறிப்பாக இளவாலை, பண்டத்தரிப்பு, பிரான்பற்று பகுதிகளில் மிக அதிகளவில் மேற்படி காய்ச்சலுக்கு இலக்காகிஇருப்பதாகவும் அத்துடன், வயிற்றுளைவு, வயிற்றோட்டம் போன்ற நோய்களும் அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, இளவாலை மத்திய மருந்தகம், மானிப்பாய் மத்திய மருந்தகம் போன்றவற்றில் சுமார் 920 பேர் வரையில் கடந்த 10 நாட்களில் காய்ச்சலிற்கு சிகிச்சை பெற்றுள்ளதாகவும் மலேரியாப் பரிசோதனைகளும் இவர்களுக்கு மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கொதித்தாறிய நீரைப் பருகுதல், வீட்டில் சமைத்த சுததமான உணவுகளை உண்ணுதல், சரியான தனிநபா சுத்தம் பேணுதல் போன்ற அடிப்படை சுகாதார செயன்முறைகளை பேணுவதன் மூலம் ஓரளவு உணவு, நீா மூலம் பரவும் தொற்று நோய்களை குறைத்துக்கொள்ளலாம் எனவும் வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (க-252)

# பயிற்சி கருத்தரங்கு

(சங்கானை)

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனைக் குடபட்ட சாரதிகளுக்கு கடந்த மாத இறுதியில் துறைசார் பயிற்சி கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இக் கருத்தரங்கிற்கு 23 சாரதிகள் பங்குபற்றி பலனையும் பெற்றுள்ளார்கள்.

இதேபோல், ஏனைய தரத்தில் உளள பணியாளர்களுக்கும் பயிற்சிக் கருத்தரங்கு விரைவில் நடைபெறவுள்ளது.

(ப-20)

# க.பொ.த (சாதாரண தரம்)

# மாதிரிப் பரீட்சை-2004

## தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆக்கம் : திருமதி க.முத்துக்கிருஷ்ணன் B.A.Dip.Ed,
யா/செங்குந்த இந்துக்கல்லூரி,
திருநெல்வேலி.

நேரம்: 2மணி

## பகுதி II

**பின்வரும் வினாக்கட்கு விடையளிப்பதுடன் கீழ் இருக்கும் வினாக்களிற்கும் விடை தருக**

**01.**"......... குழப்பமான நம்வழக்கை ஆராய்ந்து இந்தச் சிறுவனே தீர்ப்பு வழங்கப் போகிறான்"

**i.**யாரால் **ii.**யாருக்கு
**iii.**எச்சந்தர்ப்பத்தில்
**iv.**இங்கு குறிப்பிடப்படும் வழக்கு எது தொடர்பானது?

**02.** "தர உரிய பொருளைத் தராதே நீ தனியே இப்பனியிருள் கரவின் அழல சுடுவது உனக்கு அடைவோ"

**i.**யாரால் **ii.**யாருக்கு
**iii.**எச்சந்தர்ப்பத்தில்
**iv.**தர உரியபொருள் எனக் கூறப்பட்டவை எவை?

**03.** இப்பாத்திரம் ஆபுத்திரனிடம் இருந்து இங்கு வந்தது. இது கொண்டு உலகத்தின் பசியைப் போக்கும் தருமத்தை நீ செய்யவேண்டும்."

**i.**யாரால் **ii.**யாருக்கு
**iii.**எச்சந்தர்ப்பத்தில்
**iv.**.இங்கு குறிப்பிடப்படும் பாத்திரம் எது?

**04.**''மற் றொன்றும் காண்கிலேன்
ஏதிலாரும் இனித் தருவாரில்லை
போதும் வைகிற்றுப் போம் இடம் வேறில்லை
தீது செய் வினை யேற் கென் செயல்''

**i.** இக்கூற்று இடம்பெறும் நூல் எது?
**ii.**.யாரால் **iii.**யாருக்கு **iv.**எச்சந்தர்ப்பத்தில்

**பின்வரும் பாடல்களை வாசித்து அதன் பொருளை உமது நடையில் எழுதுக. தடித்த எழுத்தில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்குக.**

"ஆயிடைக் கருணை வேந்தானை மீறிய
தீயரைச் தீச்சிறைப்படுத்தல் திண்ணமென்
றேய மிச் சுருதி நூலியம் புகின்றதை
**ஆய வித் துயர்க் கடல மிழ் ந்தி னேனரோ**"

''கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபைநடுவே
நீட்டோபை வாசியாநின்றான் குறிப்பறிய
**மாட்டாதான் நன் மரம்**''

''**மாலயற்கரிய நாதன்** வடிவொரு சோதியாகிச்
சாலவே மயங்குவார்க்குச் சங்கரன் தான் மகிழ்ந்தே
நலவார் குழலாள் தன்னோடிட்ப வாகனனாய்த் தோன்றி
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி"

**பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**

**01.அ.**இளையான் குடிமாற நாயனாரின் மனைவியின் விருந்தோம்பல் பண்பு.
**ஆ.**நமுறுது மன்னனின் குணவியல்பு.
**இ.**கண்ணுவ முனிவர் சகுந்தலை மீது வைத்திருந்த பாசம் அளவிடற்கரியது விளக்குக.

**02.**"தேவ கிருபைய்யை முன்னிட்டு வாழும்" என்ற சிறுகதை மகனுக்காக ஏங்கித்தவிக்கும் தாயின் மனநிலையைச் சித்திரிக்கிறது. விளக்குக.

**03.**"முடியாத கதைகள் பல" என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்கட்கு விடை தருக.
**அ.**பொன்னம்மா என்னும் பாத்திரம சிததிாிக்கப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.
**ஆ.**இக்கதையினூடாக மலையக மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது.

### தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி I இன் விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01.2 | 02.3 | 03.1 | 04.2 | 05.3 | 06.3 | 07.3 | 08.4 | 09.1 |
| 10.1 | 11.2 | 12.1 | 13.2 | 14.3 | 15.4 | 16.1 | 17.3 | 18.2 |
| 19.3 | 20.4 | 21.3 | 22.2 | 23.1 | 24.2 | 25.1 | 26.4 | 27.4 |
| 28.3 | 29.1 | 30.2 | 31.2 | 32.1 | 33.1 | 34.2 | 35.4 | 36.1 |
| 37.4 | 38.3 | 39.2 | 40.1 | | | | | |

# பாடசாலை கூரைகள் சேதம் மருதங்கேணி மாணவர்கள் அவலம்

(மருதங்கேணி)

வடமராச்சி கிழக்கில் தொடரும் மழையினால் மருதங்கேணி கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் அமைக்கப்பட்ட தற்காலிகக் கொட்டகைகளின் கூரைகள் சேதமடைந்திருக்கிறது.

இதனால் இவ்வாறான பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் அவலங்களை எதிர்கொள்கின்றனர்.

இப்பிரதேசத்தில் அதிகமான பாடசாலை தற்காலிகக் கொட்டகைகளில் இயங்கிவருகின்றன.

இந்நிலையில் தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக இயங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கூரைகள் சேதமடைந்த பாடசாலைகளுக்கு வடமராட்சி புனரமைப்பு புனர்வாழ்வு நிறுவனம் கிடுகுகளை வழங்கவுள்ளது.

(ப-35)




யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையத்தினரால் தென்மராட்சியின் சில பகுதி மாதர் சங்க பிரதிநிதிகளுக்கு அண்மையில் நடாத்தப்பட்ட சமூக வழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்ட மையஉத்தியோகத்தர்களுடன், மாதர் சங்கப் பிரதிநிதிகளைப் படத்தில் காணலாம்.

*(படம்: சாவகச்சேரி நிருபர்)*



பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை பரிசளிப்பு விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கீதபூசணம் சு.கணபதிப்பிள்ளை பரிசு வழங்குகிறார்.

*(படம்: மூளாய் செய்தியாளர்)*



சங்கானை பிரதேச செயலகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட நடமாடும் சேவையை ஆரம்பித்துவைத்த, வலி.மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் பொதுமகன் ஒருவரின் குறையைக் கேட்டறிகிறார்.

*(படம்: மூளாய் செய்தியாளர்)*

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர் பெயர் விபரம் – கார்த்திகை 2004

(நேற்றைய தொடர்ச்சி)

## வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு

01) யா/வ.கி/10 திரு. தோமாஸ் லீனப்பு
02) யா/வ.கி/93 திரு. கந்தையா நாகப்பர்
03) யா/வ.கி/178 திரு. வேலுப்பிள்ளை வினாசித்தம்பி
04) யா/வ.கி/275 திரு. பிள்ளையினார் கந்தையா
05) யா/வ.கி/360 திரு. வேலுப்பிள்ளை வைத்திலிங்கம்
06) யா/வ.கி/422 திரு. முருகுப்பிள்ளை பிள்ளையினார்
07) யா/வ.கி/423 திரு. முருகுப்பிள்ளை பிள்ளையினர்
08) யா/வ.கி/435 திருமதி. அன்னபூரணம் நாகதம்பி
09) யா/வ.கி/448 திரு. சின்னத்தம்பி வேலாயுதம்
10) யா/வ.கி/809 திரு. ஆபிரகாம் ஜேசுராசா
11) யா/வ.கி/874 திரு. கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை
12) யா/வ.கி/955 திரு. தியாகராசா தனபாலசிங்கம்
13) யா/வ.கி/1071 திரு. ஆறுமுகம் செல்லத்துரை
14) யா/வ.கி/1081 திரு. பெரியதம்பி பொன்னையா
15) யா/வ.கி/1088 திரு. அருணாசலம் கதிர்காமு
16) யா/வ.கி/1096 திருமதி. மர்த்தீனம்மா வரப்பிரகாசம்
17) யா/வ.கி/1163 திரு. மத்தியாஸ் அருளப்பு
18) யா/வ.கி/1176 திருமதி. மகேஸ்வரியம்மா கிருஷ்ணசாமி.
19) யா/வ.கி/1402 திரு. கார்த்திகேசு ஆறுமுகசாமி

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

01) யா/சா/99 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
02) யா/சா/125 திருமதி. சறோஜினிதேவி மனோகரன்
03) யா/சா/149 திரு. அப்பாபிள்ளை சிவராமலிங்கம்
04) யா/சா/165 திரு. வைரமுத்து சுப்பையா
05) யா/சா/185 திரு. சடையர் வீரகத்தி
06) யா/சா/216 திருமதி. சிதம்பரம் கந்தையா
07) யா/சா/278 திரு. காசிப்பிள்ளை வைரமுத்து .
08) யா/சா/299 திரு. சேதுகாவலர் முருகேசு
09) யா/சா/351 திரு. வல்லிபுரம் வேலுப்பிள்ளை
10) யா/சா/431 திரு. சந்திரசேகரம் கந்தையா
11) யா/சா/453 திரு. சின்னத்தம்பி தங்கராசா
12) யா/சா/482 திரு. கணபதிப்பிள்ளை துரைரத்தினம்
13) யா/சா/517 திரு. பொன்னு முத்தையா
14) யா/சா/616 திரு. கதிரவேலு அருளம்பலம்
15) யா/சா/618 திரு. கணபதிப்பிள்ளை காசிப்பிள்ளை
16) யா/சா/760 திருமதி. தெய்வானைப்பிள்ளை முத்துத்தம்பி
17) யா/சா/822 திரு. விசுவலிங்கம் ஆறுமுகம்
18) யா/சா/841 திரு. அகிலேசர் சம்புலிங்கம்
19) யா/சா/847 திரு. செல்லையா ஆனந்தக்கதிரமலை
20) யா/சா/849 திரு. வீரகத்தி ஆறுமுகம்
21) யா/சா/887 திரு. சின்னத்தம்பி இராசையா
22) யா/சா/889 திரு. சிதம்பரி காசி
23) யா/சா/914 திரு. வீரகத்தி ஆறுமுகம்
24) யா/சா/922 திரு. வைரமுத்து இராசதுரை
25) யா/சா/936 திரு. கதிரவேலு கந்தையா
26) யா/சா/990 திரு. நாகலிங்கம் சோமசேகரம்
27) யா/சா/1035 திரு. முருகர் கதிரேசு
28) யா/சா/1040 திரு. தம்பு தம்பிராசா
29) யா/சா/1041 திரு. நல்லதம்பி கைலாசபிள்ளை
30) யா/சா/1051 திரு. காசிநாதர் சின்னத்துரை
31) யா/சா/1054 திரு. சின்னத்தம்பி கந்தர்
32) யா/சா/1060 திரு. வேலுப்பிள்ளை நடராசா
33) யா/சா/1079 திரு.சபாபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
34) யா/சா/1089 திரு. சின்னையா கனகசபை
35) யா/சா/1103 திரு. அருணாசலம் செல்லத்துரை
36) யா/சா/1113 திரு. இளையதம்பி பரமசாமி
37) யா/சா/1138 திருமதி. செல்வநாயகி கனகசபை
38) யா/சா/1139 திரு. சின்னத்தம்பி செல்லையா
39) யா/சா/1219 திருமதி. தங்கம்மா மாணிக்கவாசகர்
40) யா/சா/1251 திரு. அருணாசலம் கார்த்திகேசு
41) யா/சா/1268 திரு. சின்னத்தம்பி அருணாசலம்
42) யா/சா/1368 திரு. பொன்னர் சின்னராசா,
43) யா/சா/1377 திரு. பரமசாமி இலங்கேஸ்வரன்
44) யா/சா/1407 திரு. சபாபதி கந்தையா
45) யா/சா/1452 திரு. அருளம்பலம் சந்திரமோகன்
46) யா/சா/1528 திரு. முருகேசு செல்லத்துரை
47) யா/சா/1539 திருமதி. சின்னம்மா சின்னத்தம்பி
48) யா/சா/1584 திரு. சின்னர் அப்புக்குட்டி
49) யா/சா/1591 திரு. பூலோகசிங்கம் வெற்றிவேலு
50) யா/சா/1628 திரு. சின்னப்பா சபாரத்தினம்
51) யா/சா/1660 திருமதி. நாகம்மா ஜெயரத்தினம்
52) யா/சா/1688 திருமதி. காமாட்சி வைகுந்தம்
53) யா/சா/1709 திருமதி. அன்னபூரணம் பாலசிங்கம்
54) யா/சா/1710 திரு. சுவாமிநாதன் தம்பிஜயா
55) யா/சா/1716 திரு. சின்னத்தம்பி வில்லிபுரம் வைத்தியலிங்கம்
56) யா/சா/1718 திரு. வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை
57) யா/சா/1720 திரு. வேலுப்பிள்ளை இராசையா
58) யா/சா/1750 திருமதி. பாக்கியரத்தினம் தில்லைநாதன்
59) யா/சா/1823 திரு. அருணாசலம் சிவசங்கரப்பிள்ளை
60) யா/சா/1850 திரு. சிவகுரு இராமலிங்கம்
61) யா/சா/1882 திருமதி. தங்கம்மா இராசையா
62) யா/சா/1914 திரு. செந்தில்மணி செல்லத்துரை
63) யா/சா/1922 திரு. பூதத்தம்பி இராஜநாதன்
64) யா/சா/1980 திரு. வயிரமுத்து இரத்தினம்
65) யா/சா/2024 திருமதி. சிவபாக்கியம் சச்சிதானந்தம்
66) யா/சா/2054 திரு. கதிர்காமு கார்த்திகேசு
67) யா/சா/2059 திரு. கந்தையா துரைராசா
68) யா/சா/2105 திரு. கணபதிப்பிள்ளை சபாரத்தினம்
69) யா/சா/2169 திருமதி. தங்கம்மா இராமலிங்கம்
70) யா/சா/2207 திரு. பொன்னு சின்னத்தம்பி
71) யா/சா/2225 திரு. செல்லையா யோகீஸ்வரன்
72) யா/சா/2283 திருமதி. செல்லம்மா நமசிவாயம்
73) யா/சா/2285 திரு. சின்னத்தம்பி பொன்னம்பலம்
74) யா/சா/2287 திரு. சின்னத்தம்பி பொன்னம்பலம்
75) யா/சா/2304 திரு. சின்னத்துரை செல்லத்துரை
76) யா/சா/2310 செல்வி. நல்லம்மா செல்லையா
77) யா/சா/2343 திரு. தம்பையா தம்பிராசா
78) யா/சா/2347 திரு. தம்பு சரவணமுத்து பாலகிருஷ்ணமூர்த்தி
79) யா/சா/2435 திரு. வினாயகமூர்த்தி சபாநாயகம்
80) யா/சா/2478 திரு. சின்னப்பா நடராசா
81) யா/சா/2544 திரு. வேதவனம் ஆறுமுகம்
82) யா/சா/2565 திரு. இளையதம்பி பொன்னம்பலம்
83) யா/சா/2582 திரு. கனகசபை சதாசிவம்
84) யா/சா/2591 திரு. நாகலிங்கம் தர்மலிங்கம்
85) யா/சா/2639 திரு. செல்லையா பீதாம்பரம்
86) யா/சா/2669 திரு. காசித்தம்பி சரவணமுத்து
87) யா/சா/2697 திரு. கந்தையா வீரசிங்கம்
88) யா/சா/2768 திருமதி. இரத்தினம் பொன்னம்பலம்
89) யா/சா/2803 திரு. சின்னையா வேலுப்பிள்ளை
90) யா/சா/2817 திரு. தம்பன் சரவணை
91) யா/சா/2837 திரு. சின்னத்தம்பி குமரேசு
92) யா/சா/2928 திரு. கந்தையா வைத்திலிங்கம் இரவி தாசன்
93) யா/சா/3002 திரு. கந்தையா சண்முகதாசன்
94) யா/சா/3033 திருமதி. அன்னப்பிள்ளை செல்லத்துரை
95) யா/சா/3036 திரு. வேலுப்பிள்ளை மகாலிங்கம்
96) யா/சா/3040 திருமதி. தையல்நாயகி சுப்பிரமணியம்
97) யா/சா/3097 திருமதி. சின்னம்மா சரவணமுத்து
98) யா/சா/3115 திரு. கந்தையா வினாசித்தம்பி
99) யா/சா/3202 திரு. சிற்றம்பலம் கந்தையா
100) யா/சா/3209 திரு. வல்லிபுரம் கனகசிங்கம்
101) யா/சா/3243 திருமதி. கனகாம்பிகை சரவணமுத்து
102) யா/சா/3271 திரு. கந்தையா சுப்பிரமணியம்
103) யா/சா/3273 திரு. அருணாசலம் சுப்பிரமணியம்
104) யா/சா/3305 திரு. தில்லையம்பலம் திருச்செல்வம்
105) யா/சா/3306 திருமதி. பராசக்தி கந்தையா
106) யா/சா/3341 திரு. கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை
107) யா/சா/3418 திரு. இராமலிங்கம் பரமநாதன்
108) யா/சா/3475 திரு. தம்பிப்பிள்ளை அப்பாக்குட்டி
109) யா/சா/3483 திரு. செல்லையா பொன்னுத்துரை
110) யா/சா/3674 திரு. கதிர்காமு கந்தையா
111) யா/சா/3675 திரு. செல்லப்பா தம்பிப்பிள்ளை
112) யா/சா/3678 திரு. அப்பாக்குட்டி செல்வராசா
113) யா/சா/3708 திரு. வேலன் கணபதி
114) யா/சா/3734 திருமதி. மங்கையக்கரசி சுப்பிரமணியம்
115) யா/சா/3785 திரு. வல்லி அப்புக்குட்டி
116) யா/சா/3801 திருமதி. பார்வதிப்பிள்ளை சுப்பிர மணியம்
117) யா/சா/3825 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
118) யா/சா/3834 திரு. நல்லதம்பி வேலுப்பிள்ளை
119) யா/சா/3945 திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி
120) யா/சா/4011 திரு. குமரேசு கதிரவேலு
121) யா/சா/4094 திருமதி. வள்ளிப்பிள்ளை வல்லிபுரநாதர்
122) யா/சா/4131 திரு. மயில்வாகனம் முருகேசு
123) யா/சா/4140 திரு. வேலுப்பிள்ளை சின்னக்குட்டி
124) யா/சா/4167 திரு. கணபதி கந்தர்
125) யா/சா/4325 திரு. பொன்னையா கந்தையனார்
126) யா/சா/4328 திரு. ஆறுமுகம் கதிரவேலு
127) யா/சா/4335 திரு. குமாரசாமி சிதம்பரம்
128) யா/சா/4358 திரு.சந்தியாப்பிள்ளை ஆரோக்கியநாதர்
129) யா/சா/4364 திரு. கணபதிப்பிள்ளை ஞானேஸ்வரன்
130) யா/சா/4459 திருமதி. சரஸ்வதி சிவபாதசுந்தரம்
131) யா/சா/4555 திரு. நாகமுத்து கந்தையா
132) யா/சா/4562 திரு. வீரகத்திப்பிள்ளை கதிரேசு
133) யா/சா/4685 திரு. கந்தையா பொன்னையா
134) யா/சா/4731 திருமதி. செல்லமுத்து பெரியதம்பி
135) யா/சா/4733 திரு. என்றி அந்தோனிப்பிள்ளை பெர் னான்டோ
136) யா/சா/4741 திரு. கந்தவனம் கணேசலிங்கம்
137) யா/சா/4779 திரு. அம்பலவாணர் செல்லத்துரை
138) யா/சா/4830 திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
139) யா/சா/4864 திரு. அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து
140) யா/சா/4867 திரு. நல்லையா கனகரத்தினம்
141) யா/சா/4873 திரு. மயில்வாகனம் முத்துவேலு
142) யா/சா/4899 திரு. சிதம்பரப்பிள்ளை பொன்யைா
143) யா/சா/4921 திரு. சின்னத்தம்பி விநாயகமூர்த்தி
144) யா/சா/4965 திருமதி. பூரணம் இராசையா
145) யா/சா/5189 திரு. கதிர்காமர் பொன்னையா
146) யா/சா/5231 திரு. கணபதிப்பிள்ளை இராஜேந்திரம்
147) யா/சா/5236 திரு. கந்தையா நாகேஸ்வரன்
148) யா/சா/5308 திரு. பெனடிக் யோசேப்ராஜா
149) யா/சா/5382 திரு. ஆறுமுகம் கந்தையா
150) யா/சா/5436 திரு. கணபதிப்பிள்ளை நடராசா
151) யா/சா/5486 திரு. வேலுப்பிள்ளை செல்லையா
152) யா/சா/5490 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
153) யா/சா/5510 திரு. ஆறுமுகம் கதிரவேலு
154) யா/சா/5622 திரு. சீனிவாசகம் அரசு
155) யா/சா/5625 திரு. சின்னத்தம்பி விசுவநாதர்
156) யா/சா/5662 திருமதி. செல்லம்மா இராசேந்திரம்
157) யா/சா/5669 திருமதி. செல்வதி இராசையா
158) யா/சா/5670 திருமதி. சிவபாக்கியம் பொன்னம்பலம்
159) யா/சா/5687 திரு. ஆறுமுகம் வேலுப்பிள்ளை
160) யா/சா/5709 திரு. குகதாசன் கமலதாசன்
161) யா/சா/5710 திரு. சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை
162) யா/சா/5713 திரு. தில்லையர் வேலாயுதர்
163) யா/சா/5834 திரு. தம்பன் கந்தையா
164) யா/சா/5853 திரு. கந்தப்பு சின்னையா
165) யா/சா/5982 திரு. ஆறுமுகம் செல்லையா
166) யா/சா/6166 திரு. மயில்வாகனம் பரமநாதர்
167) யா/சா/6168 திரு. நாகலிங்கம் கனகசபாபதி
168) யா/சா/6223 திரு. இளையதம்பி ஞானரட்ணம்
169) யா/சா/6239 திரு. சின்னத்தம்பி ஆறுமுகம்
170) யா/சா/6259 திரு. பொன்னையா முத்தையா
171) யா/சா/6498 திரு. சின்னப்பா சின்னத்தம்பி
172) யா/சா/6551 திரு. கார்த்திகேசு சபாபதி
173) யா/சா/6556 திரு. கதிரவேலு சின்னையா
174) யா/சா/6592 திரு. சின்னவன் வேலன்
175) யா/சா/6621 திரு. கார்திகேசு சண்முகம்
176) யா/சா/6668 திரு. நல்லையா சிவஞானம்
177) யா/சா/6683 திரு. கந்தையா சுப்பிரமணியம்
178) யா/சா/6687 திரு. செல்லையா யோகரத்தினம்.
179) யா/சா/6774 திரு. வேலாயுதம் கதிர்காமு.
180) யா/சா/6806 திருமதி. யோக்கியம் வேலுப்பிள்ளை.
181) யா/சா/6858 கிரு. குஞ்சர் செல்லையா.
182) யா/சா/6883 திரு. பொன்னையா இராசையா.
183) யா/சா/6995 திரு. பொன்னையா இராசையா.
184) யா/சா/6996 திரு. சங்கரப்பிள்ளை மயில்வாகனம்.
185) யா/சா/7071 திரு. மாப்பாணர் சரவணமுத்து.
186) யா/சா/7112 திரு. செல்லப்பா வேலுப்பிள்ளை.
187) யா/சா/7126 திருமதி. ஜெபமணி கிருபைநாயகம்.
188) யா/சா/7173 திரு. சுப்பிரமணியம் சின்னத்தம்பி.
189) யா/சா/7261 திரு. கணபதி சின்னப்பொடி.
190) யா/சா/7276 திருமதி. ஆச்சிப்பிள்ளை சின்னையா.
191) யா/சா/7298 திரு. அம்பலவாணர் சந்திரசேகரர்.
192) யா/சா/7333 திருமதி. நாகம்மா மாணிக்கம்.
193) யா/சா/7354 திரு. கதிர்காமு மார்க்கண்டு.
194) யா/சா/7428 திரு. சின்னப்பொடி ஏரம்பு.
195) யா/சா/7476 திரு. முத்துத்தம்பி தம்பையா.
196) யா/சா/7487 திரு. தம்பிப்பிள்ளை வைகுந்தா.
197) யா/சா/7532 திரு. சிதம்பரி மினாசி.
198) யா/சா/7553 திரு. இராமலிங்கம் துரையப்பா.
199) யா/சா/7587 திரு. சரவணமுத்து அருணாசலம்.
200) யா/சா/7594 திரு. தம்பையா வைத்திலிங்கம்.
201) யா/சா/7611 திரு. அம்பலவாணர் கந்தசாமி.
202) யா/சா/7622 திரு. பொன்னன் சின்னத்தம்பி.
203) யா/சா/7639 திரு. வைத்திலிங்கம் முத்துக்குமாரு.
204) யா/சா/7646 திரு. இராமு நல்லையா.
205) யா/சா/7653 திருமதி. அன்னப்பிள்ளை சுப்பிரமணியம்.
206) யா/சா/7760 திருமதி. மீனாம்பாள் கந்தையா.
207) யா/சா/7766 திருமதி. சிவபூசணம் சுப்பையா.
208) யா/சா/7772 திரு. கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை.
209) யா/சா/7780 திரு. செல்லையா வேலுப்பிள்ளை.
210) யா/சா/7782 திரு. காசிப்பிள்ளை கனகசபை.
211) யா/சா/7816 திரு. சின்னையா கோபாலப்பிள்ளை.
212) யா/சா/7820 திரு. சின்னத்தம்பி இராமலிங்கம்.
213) யா/சா/7845 திருமதி. செல்லம்மா அப்புத்துரை.
214) யா/சா/7908 திருமதி. பாக்கியம் தம்பிஜயா.
215) யா/சா/7912 திருமதி. சின்னம்மா வினாசித்தம்பி.
216) யா/சா/7959 திரு. தம்பிப்பிள்ளை நமசிவாயம்.
217) யா/சா/7963 திருமதி. லீலாவதி கனகசபை.
218) யா/சா/8011 திருமதி. இரத்தினம் சபாரத்தினம்.
219) யா/சா/8052 திரு. கார்த்திகேசு இராசையா.
220) யா/சா/8086 திருமதி. ருக்குமணி விக்கினேஸ்வரமூர்த்தி.
221) யா/சா/8163 திரு. கந்தன் சடையர்.
222) யா/சா/8184 திரு. காசிநாதர் முருகேசு.
223) யா/சா/8322 திரு. அம்பியர் வீரசிங்கம்.
224) யா/சா/8410 திரு. சாமுவேல் பரராஜசிங்கம் இராசையா.
225) யா/சா/8414 திருமதி. சிவபாக்கியம் பீற்றர்.
226) யா/சா/8431 திருமதி. தெய்வானைப்பிள்ளை சங்கரப்பிள்ளை.
227) யா/சா/8449 திரு. வேலாயுதம் முருகர்.
228) யா/சா/8453 திரு. வெலிச்சோர் இமானுவல்.
229) யா/சா/8511 திரு. வீரகத்தி செல்லையா.
230) யா/சா/8615 திரு. நாகன் கந்தப்பு.
231) யா/சா/8636 திரு. முருகேசு மார்க்கண்டு.
232) யா/சா/8643 திருமதி. நல்லம்மா இராமலிங்கம்.
233) யா/சா/8667 திரு. தம்பையா தம்பிராசா.
234) யா/சா/8669 செல்வி. பத்மலோஜினி இராசா.
235) யா/சா/8676 திரு. குஞ்சு தம்பு.
236) யா/சா/8723 திரு. அருணாசலம் ஆறுமுகம்.
237) யா/சா/8772 திரு. குமாரவேற்பிள்ளை இராமச்சந்திரன்.
238) யா/சா/8803 திருமதி. முத்தம்மா கைலாயப்பிள்ளை.
239) யா/சா/8982 திரு. சங்கரப்பிள்ளை சிவசம்பு.
240) யா/சா/8983 திருமதி. செல்லம்மா சிற்றம்பலம்.
241) யா/சா/8997 திருமதி. சிவகாமி கதிர்காமு.
242) யா/சா/9040 திரு. கனகசபை தம்பு.
243) யா/சா/9048 திரு. பண்டாரி பொன்னையா.
244) யா/சா/9081 திருமதி. அன்னப்பிள்ளை ஆறுமுகம்.
245) யா/சா/9096 திரு. கந்தையா துரைராஜா.
246) யா/சா/9139 திரு. கார்த்திகேசு முருகப்பா.
247) யா/சா/9155 திருமதி. சிவகாமி கந்தையா.
248) யா/சா/9266 திருமதி. செல்லம்மா மாணிக்கம்.
249) யா/சா/9364 திருமதி. நாகமுத்து சிவலை.
250) யா/சா/9405 திரு. இளையதம்பி கந்தையா.
251) யா/சா/9420 திரு. கந்தையா கிருஷ்ணர்.
252) யா/சா/9426 திரு. ஆழ்வான் அப்பக்குட்டி.
253) யா/சா/9438 திரு. சடாசிவம் சரவணமுத்து.
254) யா/சா/9446 திருமதி. வேதநாயகம் தியாகராஜா.
255) யா/சா/9456 திரு. தம்பு கணபதிப்பிள்ளை.
256) யா/சா/9521 திரு. கந்தையா தர்மலிங்கம்.
257) யா/சா/9534 திரு. செல்லையா சுந்தரம்.
258) யா/சா/9593 திரு. பொன்னம்பலம் அருணாசலம்.
259) யா/சா/9619 திரு. சோமசுந்தரஐயர் பாலச்சந்திரஐயர்.
260) யா/சா/9644 திரு. அருனாசலம் கந்தையா.
261) யா/சா/9652 திரு. கந்தன் வேலன்.
262) யா/சா/9662 திரு. கோபாலு சண்முகம்.
263) யா/சா/9678 திருமதி. குஞ்சுப்பிள்ளை சின்னத்துரை.
264) யா/சா/9701 திருமதி. சரஸ்வதி இளையதம்பி.
265) யா/சா/9763 திரு. இளையகுட்டி வீரகத்தி.
266) யா/சா/9788 திரு. வல்லிபுரம் வேலுப்பிள்ளை.
267) யா/சா/9791 திருமதி. திரவியம் கணபதிப்பிள்ளை.
268) யா/சா/9818 திருமதி. இராசம்மா இராசையா.
269) யா/சா/9867 திருமதி. செல்லமுத்து ஆறுமுகம்.
270) யா/சா/9877 திரு. சின்னப்பு கந்தையா.
271) யா/சா/9914 திரு. வல்லி கந்தையா.
272) யா/சா/9940 திரு. சுப்பையா பூபாலசிங்கம்.
273) யா/சா/9949 திரு. சுப்பையா அப்புத்துரை.
274) யா/சா/9971 திரு. கதிரித்தம்பி வாரித்தம்பி.
275) யா/சா/10056 திரு. சடையர் தம்பிஜயா.
276) யா/சா/10068 திருமதி. பாக்கியம் அண்ணாசாமி.
277) யா/சா/10077 திருமதி. மாணிக்கம் இரத்தினம்.
278) யா/சா/10080 திருமதி. புனிதவதி பொன்னம்பலம்.
279) யா/சா/10084 திருமதி. பராசக்திப்பிள்ளை மெய்கண்டதேவர்.
280) யா/சா/10111 திரு. வைத்திலிங்கம் சிவப்பிரகாசம்.
281) யா/சா/10181 திரு. அந்தோனி சொலமன்.
282) யா/சா/10200 திரு. சின்னராசா கிருஷ்ணமூர்த்தி.

(தொடரும்...)

# மூல நோயும் மலச்சிக்கலும்

(தொடர்ச்சி)

### மூன்றாவது நிலை மூலம்

இரண்டாவது நிலைக்கு அடுத்த படியாக, மலங்கழிக்கும் நேரம் மட்டுமல்லாது, மற்றைய நேரங்களிலும் மூலம் மலவாசலிற்கு வெளியே நிரந்தரமாகக் காணப்படும் நிலை மூன்றாவது நிலை மூலம் எனப்படும். இது மிகவும் பிந்திய அறிகுறியாகும். எனினும் நோயாளிகளில் பல இந் நிலையிலேயே வைத்திய சாலைக்கு வருகிறார்கள். ஏனெனில் முதல் இரு நிலைகளிலும் இவர்கள் வைத்தியரிடம் செல்ல வெக்கப்படுகிறார்கள் அல்லது அசிரத்தையாகவிட்டுவிடுகிறார்கள். மூன்றாவது நிலையில் மேலும பெரும் உபாதை ஏற்படுவதால் வைத்தியரிடம் செல்கிறார்கள். இந்நிலையில் இவர்கள் தொடர்ந்து ஒரு இடத்தில் அமரவும் இயலாது அவஸ்தைப்படுகிறார்கள். இதனால் அலுவலகம் செலபவர்கள் வேலைக்குச் செல்லவும் பயப்படும் நிலை உண்டாகின்றது.

### மூல நோயின் பிற அறிகுறிகள் :-

1. சீதக் கசிவு (Mucoid disehege) ஏற்படும். இதைத் தொடர்ந்து அவ்விடத்தில் சொறிவும் (Pruritus) உண்டாகும்.

2. கடும்நோ :- வெறும் மூல நோயினால் உபாதையே ஏற்படும். ஆனால் கடும்நோ ஏற்படாது. இப்படியாகக் கடும்நோ ஏற்படுமாயின் அது வெளித்தள்ளப்பட்ட மூலத்தில் ஏதாவது சிக்கல் உண்டாகியுள்ளது என்பதற்கு அறிகுறியாகும்.

3. இரத்தச் சோகை (Anaemia) இரத்தச் சோகை நீடித்த இரத்தப்பெருக்கினால் ஏற்படும். ஓர் விளைவாகும்.

### மூல நோயின். சிக்கல்

1. இரத்தப் பெருக்கும் இரத்தச் சோகையும் (Projuse Haemorrhege and Anaemia)

2. நாளப்புடைப்புக்கள் நெறிவுறுதல் (Strangulction) இச் சந்தர்ப்பங்களில் நோயாளிக்குச் சடுதியான கடும்நோ ஏற்படும் இதனை 'Acu te Attack of Piles' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

3. நாளப்புடைப்புக்கள் உள்ள குருதி உறைதல் (Thromposis)

4. நாளப்புடைப்புக்கள் இரணமாகுதல் / புண்ணாகுதல் (Ulreration)

5. நாளப்புடைப்புக்கள் அழுகுதல் (Gangrene)

6. சீழ்பிடித்தல் (Suppuratlon)

### மூலநோயிற்குரிய சிகிச்சை முறைகள்

**அறுவையற்ற சிகிச்சை முறைகள்:-**

முதலில் நோயாளியினுடைய நோய் விபரம் அறிந்து, அவருடைய உடலை பூரணமாக பரிசோதனை செய்தல் வேண்டும். இதனமூலம் மூலநோய்க்கு வேறு நோய்கள் காரணமாக இருப்பின் அவற்றைக் கண்டுபிடிக்கமுடியும். மலக்குடலில் கைவைத்து சோதிக்கும் முறை (Per Rect al Examination - PR) இங்கு மிக அத்தியாவசியமாகும். இச் சோதனையின் போது நேர் குடலில ஏதாவது சந்தேகத்துக்குரிய கட்டிகள் அல்லது வளர்ச்சிகள் காணப்படுமிடத்து விசேட சோதனைகள் செய்தல் வேண்டும். இதற்கு சிக்மொய்டோஸ்கோப் (Sigmoidoscope) எனும் கருவி பயன்படுத்தப்படுகின்றது. இஃ.து நேர் குடலில் உள்ள மாற்றங்களை வெளிச்சமிட்டுக் காட்டும். இதன் மூலம் நேர் குடலில் புற்நோய், பெரும்குடல் அலற்சி போன்றவற்றை கண்டுபிடிக்கலாம். இவை கண்டுபிடிக்கப்படுமிடத்து அதற்குரிய சிகிச்சைகள் மேற்கொள்ளவேண்டும்.

இந் நோய்கள் இல்லாதவிடத்து அதனை உறுதிப்படுத்திய பின்பு மூலநோய்க்குப் பின் வரும் சிகிச்சை முறைகளைக் கையாளவேண்டும்.

1. மல இளக்கிகளை

உபயோகப்படுத்தி மலச்சிக்கல்களை போக்குதல் வேண்டும். உதாரணமாக Dulcolax அல்லது Scnokot குழிசைகளை இரவில் பயன்படுத்தலாம். இம்முறை வயதானவர்களுக்கு பெரிதும் கைகொடுக்கும் எளிய முறையாகும்.

2. குத வாசலை விரித்தல் முறை - (Maximal And Dilatation - MAD) இதுவே இங்கு வழமையாகக் கையாளப்படும் எளிய, துரித அபயாமற்ற சிகிச்சை முறையாகும். குதவாசலில் 6 அல்லது 8 விரல்களை வைத்து விரிக்கும் போது அங்குள்ள குத இறுக்கில் தசைகள் தளர்கின்றன. இதனால் நாளப்புடைப்புக்களின் மேல் உள்ள அழுத்தம் குறைந்து அவை சிறிதாகி மூலநோய் குணமடைகின்றது.

3. ஊசிமுறை இங்கு நாளடைப்புக்களைச் சுற்றி 5 % Phenolin Almond oil ஊசி மூலம ஏற்றப்படுகின்றது. இது முதல் நிலை அல்லது ஆரம்ப நிலை. இரண்டாவது நிலை மூல நோய்களுக்குக் கையாளப்படுகின்றது. இம் முறையில் மூலநோய் சிலருக்கு மீண்டும் வரவாய்ப்புகள் உண்டு.

4. இரப்பர் வளையங்களை உபயோகிக்கும் முறை: இது ஊசி மருந்து சிகிச்சை செய்ய இயலாத இரண்டாவது நிலை மூல நோயுக்குப் பொருந்தமானது இங்கு இரப்பர் வளையங்களை நாளப்புடைப்புகளின் அடிப்பகுதியில் இடுகிறார்கள்.

அறுவைச் சிகிச்சை முறை: இம் முறை பின்வரும் சந்தர்ப்பங்களில் கையாளப்படுகின்றது.

1. மூன்றாவது நிலை மூலம்

2. மற்றைய அறுவையற்ற சிகிசசை முறைகள். பயன் அழிக்காதபோது.

3. நாளடைந்த மூலம் .

இதற்கு ஹிமரொய்டெக்டெமி (Haemorrhoidectomy) எனும் முறை கையாளப்படுகின்றது. இங்கு சிகிச்சையின் போது குதத்தில் காணப்படும் நாளப்புடைப்புகளை அதன் அடிப்பகுதியில் கட்டி வெட்டி அகற்றி விடுகிறார்கள்.

இதனால் சிகிச்சையின் பின் ஏற்படக் கூடிய சிக்கல்கள் (Compli cations of Haemorrhoid etomy)

அ) கடும்நோ உண்டாகும்.

இதற்கு நோ நிவாரணிகள் பயன்படும் அல்லது மலவாசல் ப்குதியில் நோ குறைக்கும் ஜெலி போன்ற மருந்துகள் (Xyloc aine Jelly) தடவப்படும்.

ஆ) கடும்நோ காரணமாக சிறுநீர் கழிக்க இயலாத நிலை.

இதற்கு நோ நிவாரணிகளை உபயோகிப்பதன் மூலமோ அல்லது அடி வயிற்றில் வெந்நீர் ஒத்தடம் பிடிப்பதன் மூலமோ பலன் பெறலாம். சிலருக்கு குழாய் மூலம் (Cathetes) சிறுநீர் அகற்ற வேண்டியும் ஏற்படலாம்.

இ) இரத்தப்பெருக்கு

ஈ) குதச் சுருக்கம்

நாளடைவில் குத வாசல் சிறிதாகி குதச்சுருக்கம் ஏற்படலாம். மேலும் குதவெடிப்பும் ஏற்படலாம்.

உ) கிருமித் தொற்று

இதற்குத் தகுந்த Antibiotic குளிசைகளைப் உபயோகப்படுத்தல் வேண்டும்.

வைத்திய கலாநிதி
இந்துமதி

---

## பட்டப்பகலில் துணிகரத் திருட்டு

(கோண்டாவில்)

பட்டப்பகலில் வீட்டினுள் புகுந்து தாலிக்கொடி திருடியவர் அவ்வீட்டிலிருந்த இளைஞனால பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பின்னர் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இச சம்பவம் நேற்றுமுன் தினம் மதியம் றக்கா வீதியில் உள்ள இளையதம்பி அப்பாத்துரை என்பவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர் வெளியே சென்றுள்ளார், அவ்வேளை அவரது மனைவி கிணற்றடிக்குச் சென்றுள்ளார் அதனை அவதானித்த திருடன் உள்ளே சென்று அலுமாரியிலிருந்த ஐந்து பவுண் தாலிக்கொடி ஒன்றையும் ஒரு சோடி காற்சலங்கையையும் திருடியுள்ளார்.

திருடிய பொருட்களுடன் வெளியே சென்ற வேளை வீட்டினுள் நுழைந்த மகன் திருடனை மடக்கிப்பிடித்தார். அதன் போது அவ்விடத்தில் ஒன்றுகூடி மக்கள் திருடனை நையம்புடைத்த பின்னர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர். திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டன. (ச-130)

## மின் விநியோகம் தடை

(காரைநகர்)

சிறுப்பிட்டி தெற்கு கிராமத்திற்கான மின்வழங்கல் கடந்த நான்கு நாட்களாகத் தடைப்பட்டுள்ளது.

இது குறித்து மின்சாரசபைக்கு நேரடியாகவும் தொலைபேசி மூலமும் முறையிட்ட போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ப-246)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம் ஊரதீவு, கேரதீவுப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளது.

எனினும் புங்குடுதீவு பிரதேச சபை கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ப-126)

## போஷாக்கு உணவுத்திட்டம்

யாழ்.குடாநாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும்திட்டமொன்றை உலக உணவு ஸ்தாபனம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

யாழ்.குடாநாட்டிலுள்ள பாடசாலை மாணவர்கள் 55 வீதமானோர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இச சத்துணவு வழங்கும் திட்த்தை உலக உணவு ஸ்தாபனம் நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது. (ப-35)

## வீதி திருத்தம

(சங்கானை)

கடந்த 40 வருடங்களுக்கு மேல் திருத்தப்படாமல் இருந்த சங்கானை ஓடக்கரை வீதியின் திருத்தவேலைகள் சங்கானை ஐக்கிய நலன்புரிச்சங்கத்தின் முயற்சியை அடுத்து ஆரம்பித்துள்ளது. (ப-20)

## பனையினால் ஆபத்து

(கற்கோவளம்)

பருத்தித்துறை 3 ஆம் குறுக்குத் தெருவில் நகராட்சி மன்றத்தின் களஞ்சிய வேலிக்கு அருகில் ஓங்கி வளர்ந்து நிற்கும் உயர்ந்த பனைமரம் வீசும் கடுங்காற்றினால் முறிந்து விழக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

இதனால், இப் பனை மரத்திற்கு அருகாமையில் குடியிருக்கும் மக்களும் அப்பாதையால் செல்லும் மக்களும் பீதியடைந்துள்ளனர்.

இந்தப் பனையினால் உள்ள ஆபத்துக் குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்குப் பல தடவைகள் தெரியப்படுத்தியும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென மக்கள் விசனம் அடைந்துள்ளனர். (ப-104)

## மாவீரர் நாளை அனுஷ்டிக்க விரிவான ஏற்பாடுகள்

(பொன்னாலை)

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கபபடவிருக்கும் மாவீரர் நாளை எழுச்சியுடன் கொண்டாட மக்கள் தயாராகி வருகின்றனர்.

குடாநாட்டின் முக்கிய வீதிகள், சந்திப் பகுதிகளில் 'மாவீரர் நாள்' என எழுதப்பட்ட பதாதைகள் மற்றும் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகள் என்பன தொங்கவிடப்பட்டு மாவீரர் நாள் ஏற்பாடுகள் கோலாகலமாக நடைபெற்று வருகின்றன.

தமிழர் தாயகம் தழுவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவிருக்கும் இம் மாவீரர் நாள் நிகழ்வுகளை குடாநாட்டிற்கான தரைவழிப் பாதை திறக்கப்பட்டு கடந்த மூன்று வருடங்கள் கழிந்த நிலையில் இம் முறை மிகவும் எழுச்சிகரமாகவும்- உணர்வுபூர்வமாகவும் அனுஷ்டிப்பதற்குரிய சகல ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. (ப-49)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட காக்கைதீவு மற்றும் பொம்மைவெளிப்பகுதிகளிலுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 2 இலட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களை நேற்று வழங்கியுள்ளது.

மேற்படி பகுதியிலுள்ள 150 குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஒரு நுளம்பு வலையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் க.ஜெயராஜாவினால் வழங்கப்பட்டுள்ளன. (ற-16)

## குளிரூட்டல் அறை நிர்மாணம்

(திருநெல்வேலி)

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதி உதவியுடன் வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மீன்களை குளிரூட்டுவதற்கான குளிரூட்டி அறையொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுமார் 20 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா நிதி செலவில் இக் குளிரூட்டல் அறை நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டில் நிகழ்வு கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மருதங்கேணி உதவ! அரசாங்க அதிபர் ரி.ஜெயசீலன், விடுதலைப் புலிகளின் கடற்புலி அணியினர், மீனவர் சங்கப் பிரதிநிதிகள், ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-43)

## கடும்மழை காரணமாக வலிமேற்கு மக்கள் பாதிப்பு

(பொன்னாலை)

வலி - மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள தாழ்ந்த பகுதிகளில் மழைநீர் தேங்கி நிற்பதன் காரணமாக அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பகுதியிலுள்ள வெள்ள வடிகால்கள் மற்றும் மதகுகள் என்பன முறையாகப் பராமரிக்கப்படாமையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், வெள்ளம் தேங்கி நின்று பல குடிசை, வீடுகள் வீழ்ந்துவிடும் அபாயம் காணப்படுவதுடன் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

வலி-மேற்கிலுள்ள முன்கோடை, செம்பாட்டன் தோட்டம், ஓடக்கரை, துணவி, ஊரத்தி, அராலி மேற்கு முதலிகோவியலடி ஆகிய பிரதேசங்களிலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இம்மழை நீர் வழிந்தோடுவதற்கு ஏற்றவகையில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாதிக்கபட்ட பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப-49)

## வெயாங்கொடவில் ரயில் விபத்து

(வெயாங்கொட)

வெயாங்கொட ரயில் நிலையத்திற்கு அருகில் இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ரயில் பெட்டிகள் சில தடம்புரண்டுள்ளன.

இந்த விபத்து நேற்று முன்தினம அதிகாலை 1.30 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

ரயில் நிலையத்தில் தரித்து நின்ற ரயிலுடன், சரக்கு ரயில் வண்டி ஒன்று மோதியதிலேயே ஐந்து பெட்டிகள் தடம் புரண்டதாகத தெரிவிக்கப்படுகிறது.

தடம் புரண்ட ரயில் பெட்டிகளைத் தண்டவாளத்தில் நிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற-10)

## இலங்கை லெபனானிடையே விரைவில் நேரடி விமான சேவை

(கொழும்பு)

இலங்கைக்கும் - லெபனானிற்கும் இடையே நேரடி விமான சேவைகளை நடத்துவதற்கு இரு நாடுகளினதும் தேசிய விமான சேவை நிறுவனங்கள் தீர்மானித்துள்ளது.

அண்மையில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் இரு நிறுவனங்களும் கைச்சாத்திட்டுள்ளன.

இலங்கையின் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனமும் லெபனானின் மத்திய கிழக்கு விமான நிறுவனமும் மற்றும் பிரான்ஸ் மெடிற்றேனியன் ஆகிய நிறுவனங்களுமே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துள்ளன.

இதன் அடிப்படையில், கொழும்புக்கும் லெபனானுக்கும் இடையே நேரடி விமான சேவைகள் விரைவில் இடம்பெறவுள்ளன. (க-60)

# மாவோயிஸ்ட் தீவிரவாதிகள்
# 10 குழந்தைகளை கடத்தினர்
## சம்பவத்தால் நேபாளத்தில் பரபரப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் உள்ள கிராமம் ஒன்றில் 10க்கும் மேற்பட்ட குழந்தைகளை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். நேபாளத்தின மேற்குப் பகுதியில் தெய்லேக் மாவட்டத்தில் உள்ள பந்திய பாஷினி கிராமம். இரண்டு வாரங்களுக்கு முன் இக்கிராமத்திற்குள் புகுந்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அங்கிருந்த பத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளை கடத்திச் சென்றனர்.

இது குறித்து குழந்தைகளின் பெற்றோர் கூறுகையில், கடத்திச் சென்ற மறுநாளே விட்டுவிடுவதாக கூறிய தீவிரவாதிகள் இரண்டு வாரங்கள் ஆகியும் இதுவரை குழந்தைகளை திருப்பி அனுப்பவில்லை. குழந்தைகளை எதற்காகக் கடத்தினார்கள் என்ற விபரம் தெரியவில்லை எனக் கூறினர்.

இதற்கிடையே தாங்கள் கடத்திச்சென்ற குழந்தைகளை விட்டுவிட்டதாக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள கூறியுள்ளனர். குழந்தைகள் எங்கு சென்றனர் என்பது குறித்து குழப்பமானநிலை நீடித்து வருகிறது. (ப)

## அமெ.படைகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே
# பலுஜா நகரத்தில் உக்கிர சமர்
# 60 பேர் பலி; 80 பேர் காயம்

ஈராக்கில் அமெரிக்க கூட்டுப் படையினர் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 60க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

ஈராக்கின் புனித நகரங்களில் ஒன்றாக கருதப்படுவது பலுஜா நகரமாகும். இங்கே முஸ்லிம் தீவிரவாதிகள் மற்றும் கிளர்ச்சியாளர்கள் பலர் தலைமறைவாக வாழ்நது வருகின்றனர். இவர்களை கூண்டோடு அழிப்பதற்காக சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமெரிக்க கூட்டுப்படையினர் நேற்று முன்தினம் பலுஜா நகரை நோக்கி படையெடுத்தனர். இதை அறிந்த பக்தாத் மற்றும் பலுஜா நகரத் தீவிரவாதிகள் அமெரிக்க கூட்டுப் படைகள் மீது தற்கொலைப்படை குண்டு, கார் குண்டு, கண்ணிவெடி மற்றும் ராக்கெட்டுகள் மூலம் கொடூரத் தாக்குதல் நடத்தினர். மேலும் நேற்று முன்தினம் அதிகாலையளவில், ஆயுதம் ஏந்திய தீவிரவாதிகள் மேற்கு அன்பார் மாகாணத்தில் உள்ள காவல்நிலையங்களை குறிவைதது தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 22 பேர் பலியாகினர். இதில 7பேர் பொலிஸ்காரர்களாவர். மேலும வெடிகுண்டுகளுடனும், சிறு துப்பாக்கிகளுடனும், தீவிரவாதிகள் பக்தாததிலிருந்து சுமார் 220 கிலோ மீட்டா தொலைவில் உள்ள ஹாடிதா மற்றும ஹக்லானியா ஆகிய இடங்களில் உள்ள கவால்நிலையங்கள் மீதும் தாக்குதல் நடத்தியதாக கட்டன் நசீா அப்துல்லா தெரிவித்துள்ளார். மேலும் பலுஜா நகருக்கு உள்ளே தீவிரவாதிகள் இருந்த இடங்களில இருந்த பீரங்கிகளின் மீதும அமொிக்க கப்பற்



படையினர் தாக்குதல் நடத்தினர். அப்போது தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் நடந்த சண்டையில் 16பேர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. இப்பகுதியில் தொடர்ந்து இடம்பெறும் மோதல்களில் இதுவரை 60பேர் பலியாகியிருப்பதாகவும் 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ப)

# அப்துல் கலாமிற்கு கொலை மிரட்டல்
# கல்லூரி மாணவர்கள் இருவர் கைது
## ரமணா படக்கதையை பரீட்சித்ததாக மாணவர்கள் தகவல்

புதுவை சுதந்திர பொன் விழாவையொட்டி புதுவைக்கு வருகை தந்த ஜனாதிபதியை கொலை



செய்யப்போவதாக மிரட்டல் விடுத்த 2 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

புதுவை சுதந்திர பொன்விழாவில் கலந்துகொள்வதற்காக கடந்த 1ஆம் திகதி ஜனாதிபதி அப்துல் கலாம் புதுவை வந்தார். புதுவையில் சட்டசபை சிறப்புக்கூட்டம் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா மற்றும் கம்பன் கலையரங்கில் பள்ளி மாணவ மாணவிகளுடன் கலந்துரையாடல் ஆகிய நிகழ்சசிகளில் அவர் கலந்துகொண்டார். ஜனாதிபதி அப்துல்கலாம் வருகையையொட்டி புதுவையின் அனைத்துப் பகுதியிலும் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

இதற்கிடையே பாளையத்தில் வசித்துவரும் பொலிஸ்அதிகாரி இராமச்சந்திரன் என்பவரின் வீட்டு வராண்டாவில் 1ஆம் திகதி காலை 8 மணியளவில் ஒரு மர்ம பார்சல் கிடந்தது. அதனை எடுத்துப் பார்த்தபோது அதில் ஜனாதிபதி கம்பன் கலையரங்கம் வரும்போது அவரை கொலைசெய்வோம் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

இதை பார்த்து அதிர்ச்சியடைந்த இராமச்சந்திரன் குடும்பத்தினர் அந்தக் கடிதத்தை புதுவை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இதனால் புதுவை பொலிஸார் உஷார்ப்படுத்தப்பட்டனர். பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது. ஆனால் எந்த அசம்பாவிதமும் இல்லாமல் ஜனாதிபதி புதுவை வந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திரும்பினார்.

உயர் பதவியில் உள்ள ஜனாதிபதி அப்துல்கலாமுக்கு கொலை மிரட்டல் விடுத்தது குறித்து மத்திய புலனாய்வு, உளவுத்துறை அமைப்பாளர் மற்றும் புதுவை பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர்.

பொலிஸ் அதிகாரி இராமச்சந்திரன் வீட்டில் கிடைத்த மிரட்டல் கடிதத்தின் முன்பக்கத்தில் **ABDUL KALAM WILL BE MURDERED AT KAMBAN KALAI AR ANGAM** என்றும் பின் பக்கத்தில் **SAVE HIM IF YOU CAN BY ASC** என்றும் எழுதப்பட்டிருந்தது. மேலும் பார்சலின் உள்ளே ஒரு ஓடியோ கசட்டும் இருந்தது. ஆனால் அதில் பக்திப் பாடல்கள் மட்டுமே பதிவாகியிருந்தது.

இதையடுத்து உளவுத்துறையினர் அந்த கசட்டை ஆராய்ந்தனர். அந்த கசட்டில் உள்ள ஒரு அடையாளத்தை வைத்து அது புதுவையைச் சோந்த டாக்டர் ஒருவருக்கு சொந்தமானது என்று கண்டுபிடித்தனர். பின்னர் அந்த டாகடரை பிடித்து விசாரித்தபோது அந்த கசட்டை அவர் குயவர்பாளையத்தில் உள்ள அவரது உறவினரிடம் கொடுத்ததாகக் கூறினார்.

அவர் குறிப்பிட்ட இடத்துக்கு சென்று அவரது உறவினரிடம் விசாரிதத போது அவர் அதே பகுதியைச்சேர்ந்த ஆனந்தன் என்பரிடம் கொடுத்தது தெரியவந்தது. ஆனந்தன் புதுவை ரோடியர் மில்லில் அதிகாரியாக வேலை பார்த்து வருகிறார். இவரது மகன் சீனுவாசன் (வயது 18) புதுவையில் உள்ள ஒரு தனியார் என்ஜீனியரிங் கல்லூரியில் பி.டெக்.படித்து வருகிறார். கடந்த 31ஆம் திகதி இரவு சீனிவாசன் தனது நண்பர்கள் 6பேருடன சேர்ந்து வீட்டு மாடியில் படித்துக் கொண்டிருந்தார். பின்னர் இரவில் சீனிவாசனின் நண்பர்களான ராஜேஷ் (வயது 18) செங்கேணி (வயது 18) ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் தங்கள் வீட்டுக்கு செல்வதாக கூறி சென்றுள்ளனர்.

அப்போது சீனிவாசன் வீட்டில் இருந்த கசட்டை கையோடு எடுத்து சென்றுள்ளனர். நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் சென்ற இவர்கள் இருவரும் ஒரு பேப்பரில் மிரட்டல் கடிதம் எழுதி அதை கசட்டுடன் சேர்த்து கவரில் அடைத்து எஸ்.பி.இராமச்சந்திரன் வீட்டு வராண்டாவில் வீசி உள்ளனர்.

மாணவர்கள் இருவரும் சேர்ந்து இந்த மிரட்டல் கடிதம் எழுதியது தெரியவந்ததும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கபபட்டது. அதன்பேரில் புதுவை வடக்கு பகுதி பொலிஸ் அதிகாரி உசேன் தலைமையில் உருளையன்பேட்டை பொலிஸ் இன்ஸ்பெக்டர் தெய்வநாயகம், சப்-இன்ஸ்பெக்டர் அங்கப்பன், பயிற்சி சப்-இன்ஸ்பெக்டர் கலைச்செல்வன், ஏட்டு பால்ராஜ் ஆகியோர் இன்று காலை மாணவர்கள ராஜேஷ் மற்றும் செங்கேணி ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

அவர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையில் ரமணா படத்தில் வருவது போன்று ஏதாவது பரபரப்பு ஏற்படுத்தவேண்டும் என்று விளையாட்டுத்தனமாக இதில் ஈடுபட்டதாகக் கூறினர். (ப)

# லண்டனுக்குச் செல்வோரை நிர்வாணமாக படம்பிடிக்கின்றனர்

பயணிகளை நிர்வாணப்படம் எடுக்கும் எக்ஸ்ரே கதிர்சோதனை இங்கிலாந்து நாட்டில் முதல் முறையாக அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

விமான பயணத்தின் போது உள்ளாடைக்குள் பொருட்களை வைத்து கடத்தும் சம்பவம் அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்கப் பயணிகளை நிர்வாண படம் எடுக்கும் எக்ஸ்ரே கதிர் சோதனை இங்கிலாநது நாட்டில் முதன் முறையாக அறிமுகப் படுததப்பட்டு இருக்கிறது.

அந்நாட்டு தலைநகர் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்திற்கு வரும் பயணிகள் எக்ஸ்ரே கதிர் மிஷின் மேடைமீது ஏறி நிற்க வைக்கப்படுகின்றனர்.

அப்போது மறுபுறம் அமர்ந்திருக்கும் அதிகாரி பயணியின் நிர்வாண தோறறத்தை இஞ் இஞ்சாக பார்த்து சோதனை செய்வார். இந்த சோதனைக்கு பெண்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆனால் பயணிகளின் நிர்வாண படங்களை உடனடியாக அழித்து விடுவதாக




நான் இந்த எக்ஸ்ரே மிஷின் மீது ஏற மாட்டேன்

விமான நிலைய அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

எனினும் இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதனை விமர்சிக்கும் முகமாக இணையத்தளம் ஒன்றில் வெளியான கேலிச்சித்திரத்தை இங்கே காணலாம். (ப)

# ஈராக்கில் அவசரகால நிலைஅமுல்

ஈராக்கில் பேரழிவு ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள் வைத்துள்ளதாக கூறப்படும் அதிபர் சதாம் ஹுசைன் ஆட்சியை அகற்றிய பிறகும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படைகள் அங்கு தொடர்ந்து முகாமிட்டுள்ளன. அமெரிக்க படைகள ஈராக்கில் இருந்து வெளியேற வேண்டும் என்று சதாம் ஹுசைன் ஆதரவுத் தீவிரவாதிகள் வற்புறுத்தி அமெரிக்க படைகள் மீது திடீர் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.


ஈராககில் உள்ள பலுஜா நகரம் சதாம் ஆதரவு தீவிரவாதிகளின் கோட்டையாக விளங்கிவருகிறது. இந்தத் தீவிரவாதிகளை ஒழிக்க பலுஜா நகரம் மீது அமெரிக்க படைகள் திடீர் திடீரென்று குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் பலுஜாவில் உள்ள தீவிரவாதிகள் மீது அமெரிக்கா, ஈராக் இராணுவ வீரர்கள் மீண்டும் தாக்குதல் நடத்துவதற்கு தயாராகி வருகிறார்கள். இது போன்ற சூழ்நிலையில் ஈராக்கின் வடக்குப் பகுதியில் குர்திஷ் ஆட்சி செலுத்தும் பகுதிகளைத் தவிர நாடுமுழுவதும் 60 நாட்களுக்கு அவசர காலச் சட்டம் அமுல்படுத்தப்படுகிறது என்று ஈராக் அரசு அறிவித்துள்ளது.

ஈராக் தலைநகரான பக்தாத்தில் ஈராக் இடைக்கால அரசின் செய்தித் தொடர்பாளர் தாயீா ஹசன் அல்-நகீப் நேற்று மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். அப்போது பக்தாத்தில் குண்டுவெடிக்கும் சத்தம் பலமாகக் கேட்டது.

ஆனால் அவசரகால ஆட்சி எப்படி அமுல்படுத்தப்படும் என்பது குறித்து அல்-நஹீப் எந்த விபரங்களும் கூறவில்லை. இந்த விபரங்கள் இன்று அறிவிக்கப்படும் என்று அல்-நஹீப் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பு மூலம் பலுஜாவில் உடனடித் தாக்குதல் நடத்தப்படுமா? என்கிற கேள்விக்கும் அவர் பதில் அளிக்க மறுத்துவிட்டார். (ப)



ஈராக்கில் அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பலுஜாவில் நேற்று அதிகாலை முதல் அமெரிக்க கூட்டுப்படை தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளது. தேடுதல் வேட்டையில் அங்கு பல கலகக்காரர்களை படித்துள்ளது.

# 9 ஆவது மாடியில் இருந்து வீழ்ந்த சிறுவன் தப்பினான்

ருமேனியா நாட்டில் பெட்ரிலா நகரில் 9 மாடி அடுக்கு குடியிருப் பொன்று உள்ளது. இதன் 9 ஆவது மாடியில் உள்ள குடியிருப்பைச் சேர்ந்த 2வயது பையன் விளையாடிக்கொண்டிருந்தான். இந்தக் கட்டடத்தில், மேல் மாடியில் குடியிருப்பவர்கள் குப்பை கொட்டுவதற்கு வசதியாக மேலிருந்து கீழ்வரை சற்று சரிவான கோலத்தில் குழாய் அமைத்திருந்தனர். அந்தக் குழாய்க்குள் 9ஆவது மாடியில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தை தவறி வீழ்ந்தது. மேலிருந்து குழாய்க்குள் வேகமாக சறிக்கிவந்த குழந்தை தரைத் தளத்தின் குப்பை கூழத்தில் வந்து வீழ்ந்தான். நெடு நாட்களாக அங்கு குப்பைகளை அகற்றாமல் இருந்ததால் பஞ்சுபோல் இருநத குப்பையில் மோதி குழந்தை அதிஷ்டவசமாக உயிர் தப்பியது.

இடதுகால் மற்றும் கைகளில்



மட்டும் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது. அது கூடிய விரைவில் குணமாகிவிடும் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர். (ப)

# நீள்பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

## அத்தியாயம்-3 தொடர் -VIII

மு. திருச்செல்வம்

கரையோர ஆட்சி மாவட்டங்களும் கண்டி ஆட்சி மாவட்டங்களும் தனித்தனியாக வெவ்வேறு ஆட்சி முறைகளால் ஆட்சி செய்யப்பட்டன. அங்கே வெவ்வேறு வழமைகள் இருந்தன. மரபுரிமைகள் செயற்பட்டன.

சிங்கள நாட்டினத்தினர், இராஜகாரிய முறையைப் பின்பற்றியவர்கள், தமிழ் நாட்டினத்தினர் தலைவரி முறையைப் பின்பற்றியவர்கள்.

சிங்கள ஆட்சி மாவட்டங்கள் தனியாக இருந்தன. ஆட்சி செய்யப்பட்டன. தமிழ் ஆட்சி மாவட்டங்கள் தனியாக அமைந்த ஆட்சி செய்யப்பட்டன.

நாடு ஒருமைப்படுத்தப்படவேண்டும் தனித்தனி ஆட்சி முறை ஒழிக்கப்படவேண்டும். சிங்களவருக்கும் தமிழருக்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் இயற்றப்படவேண்டும். பிரிட்டிஷ் ஆட்சி முறை புகுத்தப்பட வேண்டும்.

இலங்கைத் தீவில் உள்ள இருவேறு நாட்டினங்களை, இரு வேறு மரபுரிமை உள்ள மக்களை இருவேறு வழமைகட்கமைய வாழ்ந்தவர்களை, இருவேறு ஆட்சி முறைகளைப் பின்பற்றியவர்களை, இருவேறு நீதித்துறையை பின்பற்றியவர்களை ஒன்றிணைத்து ஒருமைப்படுத்தி, ஓராட்சிக்குக் கீழ்க் கொணர்ந்து ஒரு நீதித்துறைக்குள் நீதி வழங்கி, ஆட்சி செலுத்தப்படவேண்டும் எனக் கோல்புறூக் ஆணைக்குழு விதந்துரைத்தது. 1833ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் நாள் பிரிட்டிஷ் மன்னரான நான்காம் வில்லியம் இலங்கைத் தீவில் நீதி (வழங்கு தலுக்கான) பட்டயத்தை அறிவித்தார். அந்தப் பட்டயத்தில் கோல்புறூக் ஆணைக் குழுவின் விதப்புரைகள் சட்டமாக்கப்பட்டன.

1795 தொடக்கம் 1833 வரை பிரிட்டிஷார் தமிழ் நிலப்பகுதிகளில் தனியாக ஆட்சி செலுத் தினர். நீதி வழங் கினர். சிலாபத்தில் இருந்து வளவை கங்கை வரையுள்ள இலங் கைத் தீவின் வடக்கு, வடமேற்கு, கிழக்குக் கரையோர நிலப்பகுதிகள் தமிழரின் வாழ்விடங்கள், தமிழ் ஈழ ஆள்புலங்கள் என்பதை அப்பொழுது பிரிட்டிஷார் ஏற்றுக் கொண்டனர்.

பிரிட்டிஷ் ஆட்சி முறையைத் திணிப்பதற்காக, மரபுவழி வழமைகளை நீக்குவதற்காக மேற்கொண்ட முயற்சியே 1833இல் வழங்கப்பட்ட பட்டயம், இதனால் இலங்கைத் தீவில் ஒரே நீதி மன்றத்தின் கீழ் நீதி வழங்கப்பட்டது. தமிழருக்கும் சிங்களவருக்கும் இருந்த தனித்தனி நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டன. ஆட்சி முறையிலும் நீதி வழங்கலிலும் இரு நிலப் பகுதிகளும் பிரிட்டிஷ் ஆட்சி முறை, நீதி முறைகளின் கீழ் கொண்டு வரப்பட்டன.

## அரசும் நாடும் –தமிழ் ஈழம்

வரலாற்றினூடாகத் தமிழ் ஈழ நாட்டில் தமிழர் தனியான அரசு அமைத்து வாழ்ந்தனர். தனியான நிலப்பகுதிகளில் வாழ்ந்தனர். தமிழரின் இறைமை தனியானதாக இருந்தது. ஆட்சியுரிமை தனியானதாக இருந்தது. ஆள்புலம் தனியானதாக இருந்தது.

1619 இல் ஈழம் தமிழரின் இறைமை தமிழரிடம் இருந்து பலவந்தமாகப் பறிக்கப்பட்டது. இதனால் ஈழத் தமிழர்கள் தமது அரசை இழந்தனர்.

1833 இல் ஈழத் தமிழரின் தனியான நிலப்பகுதி நாடு பலவந்தமாகச் சிங்களவரின் வாழ்விடங்களுடன்-நாட்டுடன் இணைக்கப்பட்டது. இதனால் ஈழத் தமிழர்களின் ஆள்புலத் தனித்துவ உரிமை இழக்கப்பட்டது.

புத்தளம் தொடக்கம், கும்புக்கன் ஆறு வரை இலங்கைத் தீவின் வடக்கு, வடமேற்குக் கிழக்கு நிலப்பகுதியே ஈழத்தமிழரின் ஆள்புலம் தமிழ் ஈழ நாடு அங்கே அமைவதே தமிழ் ஈழ அரசு.

## அத்தியாயம்-4

## 1972இன் அரசியலமைப்பும் ஈழத் தமிழர்களும்

"…. படையெடுத்த தமிழர் சந்ததிக்குச் சலுகை இல்லை என்று இன்று ஓர் அமைச்சர் கூறுகிறார். சரித்திர காலத்துக்கு முன் தமிழ் அரசன் இராவணன் இலங்கையை ஆண்டான் என்பது அவருக்குத் தெரியாது போலும், இன்று எரிந்த அசோகவனம் இலங்கையில் உள்ளது என்பதும் அவருக்குத் தெரியாது போலும்.

"… இந்த நாட்டை ஆண்ட சிங்கள தமிழ் அரசர்களுக்கிடையில் போர் மூண்டாலும், மாறி மாறி ஆண்டாலும், சிங்கள இனம் தமிழ் இனத்தைத் தனி இனமாக, வேறு இனமாகவே எப்போதும் ஏற்றுக் கொண்டுள்ளது. வெள்ளையர் வரு முன் தமிழினம் தன் இராச்சியம் கொண்டு சுதந்திர மக்களாக வாழ்ந்தது.

"போர்த்துக்கேயர் தமிழ் இராச்சியத்தின் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றிய பொழுது சிங்கள இராச்சியங்கள், இலங்கை ஒரு நாடு; இங்கு ஓரினம் தான் வாழ்கின்றது என்று கருதி இயங்கவில்லை. இதனை நீங்கள் நன்றாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

"ஆங்கிலேயர் சுதந்திரம் தந்த பொழுது இ.து ஒரு நாடு இங்கு ஓரினம் வாழ்கின்றது என்ற அடிப்படையில் எங்கள் சரித்திரத்துக்கும் சூழ்நிலைக்கும் பொருத்தமில்லாத அரசியலமைப்பைத் தந்தார்கள்.

"இன்றைய நடவடிக்கைக்கு மக்களுடைய அதிகாரம் உண்டு என்று கூறுகின்றீர்கள், மக்களுடைய அரசுரிமையின் அடிப்படையில் இருந்து இயங்குகின்றீர்கள் என்று கூறுகின்றீர்கள் நாட்டில் எத்தனை வீதம் மக்கள் இதற்கு வாக்களித்தார்கள்?

"தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் இத்தகைய நடவடிக்கைக்கு எந்தப் பிரதிநிதிக்கும் தமிழ் மக்கள் அதிகாரம் கொடுக்கவில்லை. உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் எந்த ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை. இதற்கு மாறாக உங்கள் தமிழ் வேட்பாளர்கள் அத்தனை பேரும் தோல்வியுற்றனர்.

"…. ஜனாப் முகம்மதலி ஜின்னாவைப் போல நாமும் நமது தமிழ் இனமும் நமக்கென எமது இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் அரசுரிமையையும் நிலை நாட்ட வேறு ஓர் அரசியல் நிர்ணய சபையை நிறுவி நடவடிக்கை எடுத்திருக்கலாம் அல்லவா?

"…. தமிழினத்தை உங்களோடு ஒற்றுமையாகச் சேர்த்து வைத்திருக்க அவர்களை உங்களோடு சரிசமமான சுதந்திர இனமாக வைத்திருக்க வழி செய்யவேண்டும்"

1970 ஜுலை 20ஆம் நாள் சிவசுப்பிரமணியம் கதிரவேற்பிள்ளை அரசியலமைப்பு யாக்க அவையில் உரை ஆற்றினார். சனப்பிரதிநிதிகள் சபை மண்டபத்தில் உரையாற்றினார். பிரதமரையும் அரசாங்கக்கட்சி உறுப்பினர்களையும் விளித்து உரையாற்றினார். அங்கு மேற்கண்ட கருத்துக்களைக் கூறினார்.

சனப்பிரதிநிதிகள் சபையின் கூட்டமல்ல சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களின் கூட்டம் என்பதைக் காட்ட நவரங்கலா மண்டபத்தில் கூடியவர்கள் தொடர்ந்து கூட்டங்களைச் சனப்பிரதிநிதிகள் சபை மண்டபத்திலே கூடினார்கள். அரசியலமைப்பு யாக்க அவையாகக் கூடினார்கள்.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

### கூட்டம்

(சங்கானை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

வலிமேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெறும் இக்கூட்டத்தில அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.(ப-20)

### விசனம்

(புங்குடுதீவு)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் புங்குடுதீவில் பல வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்ட போதும் மக்கள் கூடுதலாக வாழும் 3ஆம் வட்டாரம் முதலாம் சங்கத்தாகேணி ஒழுங்கை இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இதனால் மக்கள் பெரிதும் விசனம் அடைந்துள்ளனர். (ப-126)

### கண்காட்சி

(சாவகச்சேரி)

நூலக வாரத்தையொட்டி தென்மராட்சி கல்வி வலயத்தினர் புத்தகக்கண்காட்சி ஒன்றை கடந்த மாத இறுதியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடாத்தியிருந்தனர்.

இதில் பிரதம விருந்தினராக டிறிபேக் கல்லூரி அதிபர் மு. நாகேந்திரம் கலந்து கொண்டார்.(ப-29)

### ஊக்குவிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலைஞர்களை ஊக்குவிக்கும் முயற்சிகளை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் மேற்கொண்டுள்ளார்.

கலைஞர்களை ஊக்குவிப் பதற்கென கலாசார பேரவைக்கு "நிரந்தர நிதியம்" ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கலாசார பேரவைக்கு வேண்டிய கருவிகள், உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்டத்தின் கீழ் உதவிகள் பெறப்படவுள்ளதாகவும் பிரதேச செயலர் சத்தியசீலன் தெரிவித்தார்.

(ப-52)

### கட்டாக்காலிகள் அழிப்பு

(சாவகச்சேரி)

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மறவன்புலவு, தனங்கிளப்புப் பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

அதற்கான உதவியை நகரசபையினரிடம் கோரியுள்ளனர்.

தம்மால் பிடித்து வரப்படும் நாய்களை அழிப்பதற்கு சுகாதாரப் பகுதியினரது உதவியையும் இராணுவத்தினர் கோரியுள்ளனர். (ப-29)

### உப அலுவலகம் திறக்கக் கோரிக்கை

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் ஓர் நிரந்தர பிரதேச செயலக உப அலுவலகம் திறக்கப்பட வேண்டும், என அப்பகுதி மக்கள் கோரி வருகின்றனர்.

புங்குடுதீவு மக்கள் பிரதேச செயலகத்தின் சேவைகளைப் பெற வேலணை செல்ல வேண்டியுள்ளதால், எதிர்கொள்ளும் சிரமங்களைச் சுட்டிக்காட்டியே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-126)

### *ஊரதீவு பாடசாலையை இயங்க வைக்க கோரிக்கை*

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் ஊரதீவில் அமைந்துள்ள புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம் 1990ஆம் ஆண்டுக்குப் பின் இயங்க முடியாத நிலையில் கட்டடங்கள் பாரிய சேதமடைந்துள்ளன.

இதனால் கேரதீவு, ஊரதீவைச் சேர்ந்த மாணவர்கள் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்திற்கு கல்வி கற்பதற்காக 5 கிலோமீற்றா தூரம் உள்ள நடைபாதையூடாக செல்லவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

எனவே, இப் பாடசாலையினை மீண்டும் இயங்க வைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-126)

### விருது பெற்றோர்

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக பிரிவின் கலாசார விழாவில் 5 கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சரோஜா தம்பு (இசைத்துறை), ஏ.குமாரசாமி (இசைத்துறை), பீ.பஞ்சநாதர் ஐயர் (ஓவியத்துறை), கே.தணிகாசலம் (இலக்கியத்துறை), கே.நடேசன் (தொணியான (இலக்கியத்துறை) ஆகியோரே விருதுகளைப் பெற்றுள்ளனர். (ப-52)

### வெள்ளம்

(தென்மராட்சி)

மறவன்புலோ, நாவற்குழி தெற்கு கிராம நெல் வயல்களில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. தொடர்ந்து சில நாட்களாக அதிகளவு பெய்த மழையினால் பயிர்கள் அழியும் அபாயத்திலுள்ளது இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளார்கள். (ப-129)

### வீதி சேதம்

(மூளாய்)

மாவடியில் இருந்து மூளாய் நோக்கிச் செல்கின்ற வீதி ஆங்காங்கே மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

இதனால் இவ் வீதியூடாகப் பிரயாணம் செய்கின்ற மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை, பொன்னாலை நீர் விநியோக நிலையத்தில் இருந்து தெற்குப் பக்கமாக செல்லும் வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். (ப-50)

★ ★ ★

(சங்கானை)

சுழிபுரம் மேற்கில் உள்ள ஐக்கிய பாடசாலை ஒழுங்கை நீண்ட காலமாக திருத்தப்படாமல் இருந்து வருகின்றது.

இந்த ஒழுங்கையால் செல்லும் மக்களும் பாடசாலை மாணவர்களும் பலத்த சிரமங்கள் மத்தியிலேயே பயணித்து வருகின்றனர்.

இதுகுறித்து பிரதேசசபை சுழிபுரம் செயலாளருக்கு முறையிட்டும் கவனம் செலுத்தவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-20)

### நிர்வாகிகள் தெரிவு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக மு. தங்கவேலும் செயலாளராக அ.ஸ்ரனிஸ்லோஸும் பொருளாளராக க. நடராஜாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ந-43)

### சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தீவக சிகை ஒப்பனையாளர் சங்கம் மாவீரர் நாளை முன்னிட்டு வேலணை, சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டுள்ளது. (ப)

### பன்றி தாக்கி மாணவன் காயம்

(சாவகச்சேரி)

கூட்டாக வந்த பன்றிகளில் ஒன்று தாக்கியதில் மாணவன் ஒருவன் படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் சாவகச்சேரி சப்பச்சி மாவடியைச் சேர்ந்த ந. பிரசாந் (வயது16) என்ற பாடசாலை மாணவனே படுகாயமடைந்தவராவார். (ச-29)

### பிரியாவிடை

(சங்கானை)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி வந்த க. கைலாயநாதன் தற்பொழுது தெல்லிப்பழை கோட்டக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவருக்கு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் பிரியாவிடை வைபவம் நடத்தப்படவுள்ளது. (ப-20)

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர் - குறள்

# வலம்புரி

## கொக்குவில் இந்துவில் ஓர் செழிப்புறு ஈகை

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்றின் பிரதிநிதியொருவர் இங்குள்ள மக்களைக் கண்ணுற்றுத் திகைத்துப் போனார்.

அவரின் திகைப்பு மக்களின் கஷ்ட நிலைக்காக என நீங்கள் கருதலாம். அது தான் இல்லை.

இருபது வருடகாலமாக நடந்த யுத்தத்தின் மத்தியிலும் யாழ்ப்பாண மக்கள் எதுவித உள நெருக்கடிகளும் இன்றி மக்களாக வாழ்கிறார்கள் என்பதே அவரின் திகைப்பிற்குக் காரணம்.

இது குறித்து ஆராய்ந்த அந்த வெளிநாட்டவர் யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய இறை வழிபாடே யுத்தத்தின் தாக்கங்களின் மத்தியிலும் யாழ்ப்பாணத்து மக்கள் நிம்மதியாக வாழ்வதற்குக் காரணம் என முடிவு கூறினார்.

வெளிநாட்டவர் ஒருவரினால் யாழ்ப்பாணத்து மக்களின் "பக்தி நெறி" வாழ்க்கை முறைபற்றிக் கூறப்பட்ட செய்தி நமக்கு மீள் ஊக்கத்தைத் தருவதாக இருக்கின்றது. அவரினால் இங்கு கூறப்பட்ட இறை வழிபாடு என்பதற்கு அப்பால் இருக்கக்கூடிய இன்னோர் விடயம் பற்றியும் சுட்டிக் காட்டுவது அவசியமானதாகும்.

அதாவது, யாழ்ப்பாணத்து மண்ணில் இன்றும் நிலைத்து நிற்கின்ற அறப்பணியே அதுவாகும். தானமும், தவமும் தான்வரப் பெற்றால் வானவர் நாடு வழி திறந்திடுமே என்ற தத்துவத்தின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மண்ணில் இன்னமும் தர்மப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கு ஓர் உதாரணமாக கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு தனியொருவரினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட கட்டடத்தை சுட்டிக்காட்ட முடியும்.

ஆம், தன் பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள், தான் கல்வி பயின்ற கல்லூரிக்கு கோடிக்கணக்கான ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.

நவீன வசதிகளுடன் அமைத்துக் கொடுக்கப்பட்ட இக் கட்டடமானது இன்று திறப்பு விழா காண்கின்றது.

பல்வகைப்பட்ட அறப்பணிகள் இடம்பெறலாயினும், கல்விக்காகச் செய்கின்ற அறப்பணியானது காலாகாலமாக மனித வாழ்வில் ஒளியேற்றும் பணியாகும்.

உலகம் உயர்வு பெறுவது எங்ஙனமெனில், அது கல்வி ஒன்றால் மட்டுமே முடியும் என்பதே உண்மை. அந்த உண்மைக்கு உயிர்கொடுக்கும் ஓர் அரிய பணியே சுப்பிரமணியம் அவர்களின் பரோபகாரமாகும்.

அவரின் ஈகை அறப்பணியில் ஆர்வம் உடையோருக்கு அறிவு புகட்டி இதுவே வழி என்று கூறுவதாகவும் அமைந்துள்ளது. உயர்ந்தோரின் அறப்பணியும், அந்த வெளிநாட்டவர் கண்ட யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியல் செம்மைக்கான காரணம் எனலாம்.

தான் கற்ற கல்லூரிக்கு ஈகை செய்த திரு. திருமதி சுப்பிரமணியம் அவர்களின் பணி போற்றுதலுக்கும், பின்பற்றுதலுக்கும் உரியதாகும்.

# ஆங்கிலத்தை மாணவர்கள் சரிவர கற்காவிட்டால் எதிர்காலத்தில் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும்

## கஜேந்திரகுமார் எம்.பி. எச்சரிக்கை



(கரவெட்டி)

மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த மனிதராக மிளிர வேணடுமாயின் ஆங்கிலக் கல்வியைக் கட்டாயம் பயிலவேண்டும். இல்லையேல் வாழ்வில் பெரும் கஷ்டங்களை சந்திக்க வேண்டும்.

இவ்வாறு கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியில் இடம்பெற்ற கணனி அறை,ஔி,ஒலிஅறை ஆகியவற்றின் திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

அதிபர் ச.சிறிராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. கஜேந்திரகுமார் தொடர்ந்தும் உரையாற்றிய போது,

தற்போதைய நிலையை எடுத்துக்கொண்டால் பல்கலைக்கழக படிப்பை முடித்துக் கொண்ட எத்தனையோ பட்டதாரிகள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு பெரும் பிரயத்தனம் செய்தே வேலையைப் பெறமுடிகிறது. தனியார்துறை நிறுவனங்களைப் பொறுத்த வரையில் சிறு பதவிக்கு தேர்ந்தெடுப்பதாயினும் ஆங்கில மொழித் தேர்ச்சியை கவனத்தில் எடுக்கின்றார்கள்.

ஆகவே, மாணவர்கள் ஆங்கில அறிவை நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஆசிரிய சமுதாயமும் மிகுந்த அக்கறை கொண்டு மாணவரை ஊக்கப்படுத்த வேண்டும்.

பெற்றோர்களைப் பொறுத்தவரை தமது பிள்ளைகள் பாடசாலைக்கு போகின்றனஉயர் வகுப்பு படிக்கின்றனா் என்றே பெரும் பாலான பெற்றோர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். தனது பிள்ளை கல்வியில் என்ன தரத்தில் இருக்கிறது என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதில்லை.

ஆதலினால் ஆசிரியர்களே இதில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். இதனால் பெரும் முன்னேற்றத்தை அடையலாம்.

அததுடன், எமது பிரதேசம் தற்போது கல்வியில் சற்று வீழ்ச்சி கண்டுள்ளது. அதற்கு யுத்த நடவடிக்கையும் ஓர் காரணியாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வருடம் 50 இலட்சம் ரூபா பணமே ஒதுக்குவார்கள் அவையும் உரிய காலத்தில் கிடைப்பதில்லை அவற்றைக் கொண்டே நாம் எமது பிரதேசத்தில் பிரிதது ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கி வழங்க வேண்டும். இந் நிதி எம்மைப் பொறுத்தவரை போதாது. முன்னுரிமையடிப்படையில கிராமப்புறப்பாடசாலைகளுக்கும் மற்றும் அபிவிருத்திகளுக்கும் ஒதுக்கி வருகிறேன்.இன்று இப் பாடசாலையைப் பொறுத்தவரை மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப அடுத்த வருட ஒதுக்கீட்டில்சில உதவியை வழங்க முடியும் என்றார். (ப-101)

# தமிழினத்தின் தனித்துவமான கலைகள் பேணிப் பாதுகாக்கப்படுதல் வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வலியுறுத்து

(பருத்தித்துறை)

"தமிழ் மக்களின் தனித்துவத்தினை உணர்த்தவும் இலைமறை காய்களாக மறைந்திருக்கும் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரவும் கலாசார விழாக்கள் களம் அமைத்துக் கொடுக்கின்றன இதனால் இவ் விழாக்களை நடாத்துவது இன்றைய காலத்தின் தேவையாகும்"

இவ்வாறு வடமாரட்சி தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவு கலாசார விழாவின் இறுதிநாள் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் குறிப்பிட்டார்.

கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் பண்டிதர் வீரகத்தி அரங்கில் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் மோகனதாஸ்,

தமிழ் மக்களுக்கென தனியான கலாசார மரபு உண்டு. அதிலும வடமராட்சி மண் தனித்துவம் மிக்கது. பல அறிஞர்கள், கல்விமான்களை உருவாக்கிய பெருமை வடமராட்சி மண்ணிற்கு உண்டு.

இப்பகுதி மக்கள் கலையுணர்வோடும், உறுதியான கலாசார பாரம்பரியங்களுடனும் வாழ்ந்து வருபவர்கள்.

மனித வாழ்க்கையோடு கலை, கலாசாரம், பண்பாடு ஆகியன பின்னிப் பிணைந்துள்ளன. இவைகளே எமது இனத்தின் அடையாளமாகவும் விளங்குகின்றன. தமிழ் மக்களின் பாரம்பரியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு எமது எதிர்காலச் சந்ததியினருக்குக் கொண்டு செல்லப்பட வேணடியது முக்கியமாகும் என்றார்.

பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமை உரையில் குறிப்பிட்டதாவது,

கலைஞர்கள் வளரும் போதே கௌரவிக்கப்பட வேண்டும். அவர்களது திறமைகள் வெளிக்கொண்டு வரப்படவேண்டும். இதன்மூலம் கலைஞர்களின் படைப்புக்களையும் கலை வெளிப்பாடுகளையும் சமூகம் பெற்றுக்கொள்ளமுடியும்.

இம் மண் கலை இலக்கியத்துறைகளில் புகழ் பூத்த அறிஞர்களையும் உருவாக்கிய மண். சிவசம்புப்புலவர், கலைஞர் செல்லையா, பண்டிதர் வீரகத்தி,சிரித்திரன், சுந்தர், மன்னவன் கந்தப்பு போன்ற கலைஞர்கள் இம்மண்ணில் தோன்றி மறைந்துவிட்டாலும் அவர்கள் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைகள் மறைந்து விடவில்லை.

கவிதைகளாக, நாவல்களாக, இலக்கியங்களாக அவர்கள் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பேராசிரியர் சிவத்தம்பி, உடுவை தில்லைநடராஜா, தெணியாள் போன்றோர் சமகாலத்தில் படைப்புக்களின் சுரமாக இம் மண்ணிற்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எமது கலாசாரப் பேரவை இவ்வாண்டு இம் மண்ணில் ஐந்து கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்துள்ளது.

இக் கலைஞர்கள் மாகாண மட்டத்திலும்,தேசிய மட்டத்திலும் பல விருதுகளைப் பெற்றவர்கள். அவர்கள் இன்று தமது சொந்த மண்ணிலே சொந்த மக்களின் முன்னிலையில் பெறுகின்ற கௌரவம் மிகப் பெறுமதி மிக்கதும் வாழ்விலே மறக்க முடியாத நிகழ்வுமாகும் என்றார்.

இவ்விழாவிலே யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கே. சிவநேசன், எஸ். கஜேந்திரன், எம்.கே. சிவாஜிலிங்கம், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபைச் செயலாளர் ஏ.எம். ஜோசேப், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. தயா ஆகியோரும் உரையாற்றினர்.

கலாசார நிகழ்வுகளை அடுத்து, கலாசார உத்தியோகத்தர் எஸ். செல்வசுகுணா நன்றியுரை நிகழ்த்தினார்.

இக் கலாசார விழாவில் முதல் நாள் நிகழ்வுகள் எழுத்தாளர் தெணியான தலைமையில் மன்னவன் கந்தப்பு அரங்கில் நடைபெற்றது. விருந்தினர்களாக யாழ். அரசியல் துறைப் துணைப் பொறுப்பாளர் எஸ். செம்மணன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம், வடமராட்சி மகளிர் அரசியல்துறைப பொறுப்பாளர் அன்பு ஆகியோர் கலந்து கொண்டனர்.

கரவெட்டிப் பிரதேச மறைந்த கலைஞர்களது உருவப்படங்கள்,ஆக்கங்கள், வாழ்க்கைக்குறிப்பு கண்காட்சிப்படுத்தப்பட்டதுடன தற்கால கலைஞர்களது ஆக்கங்களும் கலை வெளிப்பாடுகளும் கொண்ட கண்காட்சியும் இடம்பெற்றது.

மாலை நிகழ்வுகள் பேராசிரியர் துரைராஜா அரங்கில் யாழ். பல்கலைக்கழக தமிழத்துறைத் தலைவர் பேராசிரியர் ஏ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. தமிழ்த்துறை விரிவுரையாளர்களான கே. அருந்தாகரன், ஏ. குமரன் ஆசிரியர் கே. குணேஸ்வரன் ஆகியோர் ஆய்வுரையையும்,. ஏ. இரகுநாதன் நன்றியுரையையும் நிகழ்த்தினர் என்பது குறிப்பிடத் தக்கது. (ப-52)

# இலங்கையின் மொத்த சனத்தொகையில் 90 வீதமானோருக்கு கணனி அறிவு இல்லை

(கொழும்பு)

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 90 வீதமானோருக்கு கணனி பற்றிய அறிவு இல்லை என்று தொகைமதிபீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ. ஜி.டபிள்யூ. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கணனிக்கல்வி அறிவு தொடர்பாக நடாத்தப்பட்ட விஞ்ஞான ஆய்வு அறிக்கையை வெளியிட்டு வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 10 வீதத்திற்குக் குறைவானோரே கணனி அறிவைப் பெற்றிருப்பதாக 2004இல் நடாத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் கணனி அறிவுடையோரின் வீதம் உயர்வாகவும், மொனராகல மாவட்டத்தில் மிகக் குறைவாகவும் காணப்படுகின்றது.

காலி, மாத்துறை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் சராசரியான கணனிக்கல்வி அறிவு வீதம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் பின்சாரம் மற்றும் தொலைபேசி வசதிகள் போதுமான அளவில் இல்லாமையே கணனிக் கல்வி அறிவு வீதம் குறைவடைந்துள்ளமைக்கு முக்கிய காரணமாகும்.

இலங்கையில் இணையத்தளத்தைப் பாவிப்போரின் எண்ணிக்கை மூன்று சதவீதமாகவே இருப்பதாகவும் இவ் ஆய்வின் மூலமாகத் தெரியவந்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ந-121)

## ஓம் தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

**தெருக்களைச் சுத்தம் செய்வது என்பதும் மருத்துவமனைகள் கட்டுவது என்பதும் என்ன? அவற்றின் மதிப்பு துறப்பதில் தான் இருக்கிறது. துறப்பதற்கு எல்லையே இல்லை. இவ்வளவு தான், இதற்கு மேல் இல்லை என்று துறவுக்கும் எல்லை வகுக்கிறார்கள் இது தான் சங்கடம். ஆனால் துறவுக்கு எல்லையே இல்லை. உயர்ந்தவை வேண்டுமானால் கீழானவற்றைத் துறந்து விடுங்கள்.**

**சுவாமி விவேகானந்தர்**

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்க உடன் நடவடிக்கை எடுக்குக

## அமைச்சர் ரிஷாத் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(புத்தளம்)


இலங்கை கடற்பிரதேசத்துக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப்பதை உடன் தடைசெய்யுமாறும், இதற்கு எதிராக மன்னார் பேசாலையில் மீனவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் நியாயமானதெனவும் வலியுறுத்தி வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஜனாதிபதிக்கு தொலைபேசி மூலம் வலியுறுத்தியுள்ளார்.

மன்னார் மாவட்ட மீனவர்கள் கடற்றொழிலை நம்பியே தமது வாழ்க்கையை நடாத்துவதாக அவர் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த பலவருடகாலமாக மன்னார் மற்றும் தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகள் மூலம் அங்கு மீன்பிடிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இதனால் இலங்கையின் கடல் வளம் வெளிநாட்டவர்களால் சூறையாடப்படுவது மன்னார் மாவட்ட மீனவ சமூகத்துக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைவில் எடுக்குமாறும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-15)



# மக்கள் வங்கிக் கிளைகளில் சில பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலேயே நியமனம் வழங்கப்படும்

## வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் நாள் சம்பளத்திற்குப் பணியாற்றி நிரந்தர நியமனம் கிடைக்காமல் பணியிலிருந்து விலகிய எட்டுப்பேர் யாழ்ப்பாணத்தின் யுத்தகாலத்தில் கடமையாற்றிய தமக்கு நிரந்தர நியமனம் வழங்கும்படி கோரி நேற்று முன்தினம் மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடுசெய்துள்ளனர்.

இவர்களது முறைப்பாட்டை அடுத்து நேற்றைய தினம் மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர் பத்திரிகையாளர்களுக்கு இவ்விடயம் குறித்து விளக்கமளித்தார்.

இச்சந்திப்பின்போது அவர் இது குறித்து விளக்கமளிக்கையில், யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் தட்டெழுத்தாளர்கள், அலுவலக உதவியாளர்கள், கணினி இயக்குநர்கள், அலுவலக ஊழியர்கள் ஆகியோரை ஒப்பந்த அடிப்படையிலேயே பணிக்கு அமர்த்தவேண்டும் என எமது தலைமையகத்திலிருந்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனால் நாம் எமது வங்கிகளில் இனிமேல் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குத் தேவையானவர்களை மக்கள் வங்கியின் வேலைவாய்ப்பு முகவராகச் செயற்படும் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக நிரப்ப உள்ளோம்.

இதேபோன்று பணியிலிருந்து விலகி முறைப்பாடு செய்துள்ள இந்த எட்டுப்பேரையும் மீண்டும் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாகவே ஒப்பந்த அடிப்படையில் வேலையில் ஈடுபடுத்தமுடியும்.

இதற்கு இவர்கள் ஒரு மாதத்திற்குள் இணக்கம் தெரிவித்தால் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சிபார்சு செய்து இவர்களது வேலை அனுபவத்தையும் குறிப்பிட்டு மீண்டும் இவர்களை ஒப்பந்த அடிப்படையில் வேலையில் இணைத்துக்கொள்ள முடியும்.

அத்துடன் அரசாங்கம் மேற்குறிப்பிட்ட வங்கி ஊழியர்களை நிரந்தர நியமனமாக்குமேயானால் தான் இந்த எட்டுப்பேருக்கும் முதன்மையளித்து சிபார்சு செய்யப்படும் என உறுதியளித்துள்ளார். (ற-19)

# கொக்குவில் இந்துவில் இன்று மாடிக்கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாணிக்கம் - பாக்கியம் ஞாபகார்த்த மணிமண்டபத் திறப்புவிழா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவரும், ஓய்வுபெற்ற நிறைவேற்றுப் பொறியியலாளருமான இ.நடராஜாவின் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இந்துசமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சி.விநாசித்தம்பி, சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள், தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் க.அருள்மாஸ்ரர், யாழ். கல்வித் திணைக்கள பொறியியலாளர் சி.சிவபாலன், கல்லூரியின் முன்னாள் அதிபர்களான அ.பஞ்சலிங்கம், இ.மகேந்திரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

கல்லூரிக்கு அருகில் உள்ள கிருபாகர சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் விசேடபூஜை வழிபாடுகள் இடம்பெற்ற பின்னர், அங்கிருந்து விருந்தினர்கள் மங்கள இசையுடன் ஊர்வலமாக அழைத்து வரப்படுவர்.

மாணிக்கம் - பாக்கியம் ஞாபகார்த்த மணிமண்டபத்தை மாணிக்கம் சுப்பிரமணியமும், சுப்பிரமணியம் மண்டபத்தை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் திறந்துவைப்பர்.

கட்டடத் திறப்பு விழா ஞாபகார்த்த மலர் பழைய மாணவர் சங்கத் தலைவரால் வெளியிட்டு வைக்கப்படுவதுடன், வாழ்த்துரைகள் முன்னாள் அதிபர்களான அ.பஞ்சலிங்கம், இ.மகேந்திரன், கல்லூரியின் தற்போதைய அதிபர் பொ.கமலநாதன் ஆகியோரால் நிகழ்த்தப்படும்.

இந்நிகழ்வில் பாராட்டு உரைகளை பொறியியலாளர் சி.சிவபாலன், தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் க.அருள் மாஸ்ரர், கல்லூரியின் ஆசிரியர் க.பரமேஸ்வன், மாணவர் சார்பில் இ.பகீரதன் ஆகியோர் நிகழ்த்துவர். (இ)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கந்தபுராண வீதி கந்தர்மடத்தில் உள்ள ஆனந்த சாகரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஜனை மண்டபமொன்று இன்றுகாலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சிவதொடண்டர் ஆச்சிரமத்தைச் சேர்ந்த தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் இம் மண்டபத்தை வைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார். (ப)

# தலைவர் பிரபா - பாலசிங்கம்...

இவர்கள் இருவரையும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, கேணல் விதுஷா, கேணல் ஜெயம், கேணல் ரமேஸ் உட்பட புலிகளின் தளபதிகள், போராளிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

நாளை தீபாவளித் தினத்தன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் சந்திக்கின்றார்.

இச் சந்திப்பினை முன்னிட்டு தலைவர் பிரபாகரனுடன் புலிகளின் அரசியல் வியூகங்கள் குறித்து ஆராயவும் பீற்றர்ஸனுடனான சந்திப்பில் கலந்துகொள்ளும் நோக்கிலுமே அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வருகை தந்ததாக தெரியவருகிறது.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சமாதான முயற்சிகளின் நகர்வுகள் குறித்து நீண்டநேரம் ஆராய்ந்ததாக தெரியவருகிறது.

சமாதான முயற்சிகள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு குறித்தும் அரசாங்கத்தின் போக்குக் குறித்தும் விடுதலைப் புலிகள் மேற்கொள்ள வேண்டிய அரசியல் வியூகங்கள் குறித்தும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

உடல்நிலை சீராக இல்லாத போதும் வன்னியில் சில தினங்கள் தங்கியிருக்கத் திட்டமிட்டிருக்கும் கலாநிதி பாலசிங்கம் பல முக்கிய சந்திப்புக்களில் ஈடுபடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-121)

## ஹன்டர்...

பிரஸ்தாப தாய் சைக்கிளில் முல்லைத்தீவு பரந்தன் வீதியில் மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது பரந்தனில் இருந்து அதிவேகமாக வந்த ஹன்டர் வாகனம் அவரை மோதியதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவ இடத்தில் மூச்சுத் திணறிய நிலையில் மீட்கப்பட்ட பிரஸ்தாப பெண்ணை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது வழியில் உயிரிழந்தார். (இ-121)

## கலைப்பீட மாணவர்களின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான முதலாம் வருட இரண்டாவது அரையாண்டு மற்றும் மூன்றாம் வருட இரண்டாவது அரையாண்டுப் பரீட்சைகள் தொடர்பான விபரங்கள அட்டவணைப் படுத்தப்பட்டு கலைப்பீட விளம்பரப் பலகையில் வைக்கப்பட்டுள்ளது.

கலைப்பீட மாணவர்கள் தாங்கள் தோற்றவிருக்கும் பாடங்களில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்கள் வருமாயின் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொண்டு சரிசெய்துகொள்ளுமாறு சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மாணவர்களைக் கேட்டுள்ளார். (க-5)

# தொடர்மழை காரணமாக 60 குடும்பங்கள் இடம்பெயர்வு

## வரணியில் அவலம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக வரணி வடக்கிலுள்ள கறுக்காய் பகுதியிலிருந்து 60 குடும்பங்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களிற்குச் சென்று தங்கியுள்ளன. அவர்களது குடியிருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழைகாரணமாக தமது வீடுகளை விட்டு வெளியேறிய மேற்படி குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பதற்கு தென்மராட்சி பிரதேசசெயலர் அலுவலகத்தின் சமூகசேவைப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (ப-47)


**தோட்ட/ குடியிருப்பு காணி விற்பனைக்கு உண்டு**

இளவாலை, தெல்லிப்பழை சிறுவிளான் வீதியில் அமைந்துள்ள மின்சார வசதியுடன் கூடிய பண்படுத்தப்பெற்ற செம்மண் காணி 37 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொழிற்சாலை அமைக்க, வீடுகட்டிக் குடியிருக்க, பெரிய அளவில் தோட்டம் செய்ய பொருத்தமான இடம். (கிராயிட்டி வைரவ கோவிலுக்கு அருகில் அமைந்துள்ளது)

தொடர்பு:- விளம்பரதாரர்

தொலைபேசி :- 222 3081 (C-687)

**பேராசிரியர் அ.துரைராஜா நினைவாக...**

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களது 71வது பிறந்த தினத்தை முன்னிட்டு பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் முற்பகல் 10 மணிக்கு 1009 நவகோத்திர சங்காபிஷேகம் நடைபெறும். பிற்பகல் 3.30 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இவரது நினைவாக விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
ச.க.தனேந்திரன்
(யாழ்பல்கலைக்கழகம்)

(8993)

நா தன் ஸ் சி னி மா

10.30, 2.30, 6.30 இற்கு
கம்பஸ்
இரவு 8.30 இற்கு
SPIDER MAN 1
மிகவிரைவில்
ட்ரீம்ஸ்
யாழ்ப்பாணம் (நீல்ஸ்) (சி-675)

**தோட்ட/ குடியிருப்பு காணி விற்பனைக்கு உண்டு**

இளவாலை முள்ளானையில் மின்சார வசதியுடன் கூடிய பண்படுத்தப்பெற்ற செம்மண்காணி 22 பரப்பு விற்பனைக்கு உண்டு. தொழிற்சாலை அமைக்க, வீடுகட்டிக் குடியிருக்க, பெரிய அளவில் தோட்டம் செய்ய பொருத்தமான இடம்.

தொடர்பு:- விளம்பரதாரர்

தொலைபேசி :- 222 3081 (C-686)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.